

# எதிர்பாராத அல்லது திடீர் வன்முறைகளுக்கு எதிர்வி னையாற்றும்போது சிவில்சமூக அமைப்புகள் எதிர்கொள்ளும் சவால்கள்

**(ஏப்ரல் 2023)**

LAW & SOCIETY TRUST

# எதிர்பாராத அல்லது திடீர் வன்முறைகளுக்கு எதிர்வினையாற்றும்போது சிவில் சமூக அமைப்புகள் எதிர்கொள்ளும் சவால்கள்

**(ஏப்ரல் 2023)**


LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

எதிர்பாராத அல்லது திடீர் வன்முறைகளுக்கு எதிர்வினையாற்றும்போது
சிவில் சமூக அமைப்புகள் எதிர்கொள்ளும் சவால்கள்
(ஏப்ரல் 2023)

© சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளை

முதல் அச்சிடுதல்: ஜூலை 2023

ISBN 978-624-5545-21-6

பக்கம் அமைப்பு:
ரசிகர் குணவர்தன

கவர் அமைப்பு
ரசிகர் குணவர்தன

அச்சிடுக
நேரடி அச்சுப்பொறிகள்

வெளியீடு

சட்டம் மற்றும் சமூகப் பொறுப்பு,
03, கின்சி டெரஸ், கொழும்பு 08
தொலைபேசி: : 94 11 2684845 | 94 11 2691228 | 94 11 2684853
தொலைநகல்: 94 11 2686843
மின்னஞ்சல்: info@lstlanka.org
வலை : https://www.lstlanka.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நன்றி நவிலல் | 5 |
| பெயர்ச்சுருக்கப் பட்டியல் | 6 |
| நிறைவேற்றுச் சாராம்சம் | 7 |
| அறிமுகமும் கண்ணோட்டமும் | 8 |
| ஆய்வு முறையியல் | 10 |
| தரவுத்தளம் | 10 |
| ஆய்வின் அளவுருக்கள் | 11 |
| வினாக்கொத்து | 11 |
| எழுமாறான மாதிரிகளின் தெரிவு | 13 |
| தரவுகளை அட்டவணைப்படுத்தல் | 14 |
| பண்புசார் தரவுகள் | 14 |
| தொகைசார் தரவுப்பகுப்பாய்வு | 15 |
| பண்புசார் தரவுப்பகுப்பாய்வு | 28 |
| மட்டக்களப்பிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் | 28 |
| அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்ய | 34 |
| பகுப்பாய்வு | 35 |
| பரிந்துரைகள் | 40 |
| கொள்கைச் சட்டகம் | 43 |
| முடிவுரை | 45 |
| நூல்களின் பட்டியல் | 48 |
| அனுபந்தம் ஐ: கணக்கெடுப்பு வினாக்கொத்து | 51 |

# நன்றி நவிலல்

தனி மனிதர்கள் பலரது உதவும் மனப்பான்மை இருந்திராவிட்டால் இந்த வெளியீடு சாத்தியமாகியிருக்காது. தமது பணிச்சுமை மிக்க நேரசூசியிலிருந்து நேரம் ஒதுக்கி கணக்கெடுப்புக்கு பதிலளித்ததையிட்டு நாம் தொடர்பு கொண்ட அனைத்து ஊளுழுகளுக்கும் நன்றி கூறுவதற்கு ஆய்வுக் குழு சார்பாக இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறோம். 20 முதல் 30 நிமிட நேரத்தை ஒதுக்கி வினாக்கொத்துகளுக்கு பதிலளித்த 150இற்கும் மேற்பட்ட அமைப்புகளினதும் பங்களிப்பு இந்த ஆய்வை நிறைவு செய்வதில் முக்கியமானது. பண்புசார் ஆய்வுக்கூறுகளுக்காக மட்டக்களப்பில் நாம் சந்தித்த CSOக்கள் மற்றும் ஆய்வு குறித்து கலந்துரையாடுவதற்காக எம்முடன் சில மணிநேரங்களைப் பகிர்ந்து கொண்ட பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் நாம் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். தொகைசார் தரவு இனங்காணல்களை விவரித்துப் பகுப்பாய்வு செய்வதில் கலாநிதி நிலங்க அபேசிங்க அவர்களது வகிபங்கு மிக முக்கியமானது. கணக்கெடுப்புக்காக ஊளுழுக்களை தொலைபேசியில் தொடர்புகொண்ட எமது விடாமுயற்சியுள்ள ஆய்வுப்பயிலநர்களுக்கும் நாம் இச்சமயத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். ஆய்வு நிறைவடைந்து சிறிதுகாலத்தினுள் அகால மரணமடைந்த எமது திறமையான பயிலுநர்களில் ஒருவரான சதுரி மல்லிகாராச்சியின் குடும்பத்தினருக்கு இச் சந்தர்ப்பத்தில் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பெயர்ச்சுருக்க பட்டியல்

ADB - ஆசிய அபிவிருத்தி வங்கி

CSO - சிவில் சமூக அமைப்பு

NGO - அரச சார்பற்ற நிறுவனம்

INGO - சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம்

DS - மாவட்ட செயலகம்

LST – சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளை

OECD - பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம்

DO – அபிவிருத்தி உத்தியோகத்தர்

PTA – பயங்கரவாதத் தடுப்பு சட்டம்

ATA – பயங்கரவாதத்துக்கெதிரான சட்டம்

# நிறைவேற்று சாராம்சம்

CSOக்கள் தொடர்பாக இலங்கையில் பல்வேறு ஆய்வுகள் மற்றும் கட்டுரைகளும் எழுதப்பட்டிருந்தாலும் எதிர்பாராத அல்லது திடீர் வன்முறைக்கு எதிர்வினையாற்றும்போது CSOக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் குறிப்பான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. அதாவது, இவ் அறிக்கையின் ஆய்வாளர்களுக்கு இந்த குறிப்பிட்ட தலைப்பின் கீழ் திரட்டுவதற்கு முந்தைய தரவுகளை-யோ, இலக்கியங்களையோ கிட்டவில்லை. எவ்வாறெனினும், இது ஆய்வுக்குழுவுக்கு எண்ணக்கருவா-க்கம் செய்வதற்கும் மற்றும் ஆய்வினை நடத்துவதற்கும் ஒரு வெற்றுக் கற்பலகை ஒன்றை வழங்கியது.

மிகவும் துல்லியமான தரவைச் சேகரிக்கும் நோக்கில் ஒரு சில மாதிரி மாவட்டங்கள் அல்லது மாகாணங்களு-க்குப் பதிலாக, CSOக்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியிலான கணக்கெடுப்பை நடத்துவதற்கு ஆய்வுக் குழு முடிவு செய்தது. நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் மூலமாகவே CSOக்கள் ஆகக்கூடிய அளவில் மட்டக்களப்பிலும் ஆகக்குறைந்த அளவில் பொலன்னறுவையிலும் செயற்படுவதை இனங்காண முடிந்தது. எனினும், சுருக்கம் மற்றும் சிறந்த கட்புலனாகும் பிரதிநிதித்துவத்துக்காக, இந்த அறிக்கையில் ஐந்து மாவட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு தவிர்ந்த நான்கு மாவட்டங்களும் பிரதான திட்ட-த்தில் கவனம் பெறும் பகுதிகளாக இருந்தமையால் இக் கணக்கெடுப்புக்காக தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனக் குழுக்களின் பிரதிநிதித்துத்தையும் கொ-ாண்டுள்ளதோடு நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய பகுதிகளையும் இடைவெட்டுகின்றன.

எதிர்பாராத வன்முறைக்கு எதிர்வினையாற்றும் போது CSOக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் உதாரணமாக, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அமைச்சு மட்ட அரசாங்கம், CSOக்கள் பணி-புரியும் சமூகங்கள் முதலான வெளியகப் பிரச்சினைகள் மற்றும் வளப்பற்றாக்குறை போன்ற உள்ளகப் பிரச்சினைகள் குறித்து இந்த ஆய்வு ஆராய்கிறது. இந்தத் தரவுகள் ஒரு கணக்கெடுப்பு மூலம் சேகரி-க்கப்பட்டு பகுப்பாய்வுக்காக வரைபுகளில் காட்டப்பட்டுள்ளன. இவ் அறிக்கையானது தொகைசார் தரவுக் கண்டுபிடிப்புகளை இன்னும் விரிவாக ஆராயவும் ஊளுழுக்களின் நிலைமை குறித்த பார்வைக்கோணத்தை புரிந்துகொள்ளவும் உதவும் பண்புசார் ஆய்வுக் கூறுகளைக் கொண்டுள்ளது. அத்துடன் இவை அனைத்தும் எதிர்பாராத வன்முறை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

இந்த அறிக்கையானது CSOக்கள் மற்றும் எதிர்பாராத வன்முறைகள் ஆகியவற்றை வரையறுப்ப-தில் ஆய்வுக் குழு எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவை எவ்வாறு முறியடிக்கப்பட்டன, தொகைசார் ஆய்வின் துணிபுகள் மற்றும் பகுப்பாய்வு, அத்துடன் அடிப்படை கணக்கெடுப்பு தொடர்பில் உள்ளார்ந்த புரிதலைத் தரும் பண்புசார் தரவுகள் பற்றிய விரிவான விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

# அறிமுகமும் கண்ணோட்டமும்

சிவில் சமூக அமைப்புகள் (CSOக்கள்) பெரும்பாலும் முறைசார் அல்லது முறைசாரா அவை குடிமக்களால், அரசாங்கத்தின் பகுதியாக இல்லாத பொதுமக்களால் சமூகத்துக்கு சிலவகையான செயற்பாட்டுத் தேவைகளை பெற்றுக்கொடுப்பதற்காக உருவாக்கப்படும் அமைப்புகளாகும். எவ்வாறெனினும், ஊளுழுக்கள் தொடர்பில் அவ் அமைப்புகளின் சில குழுக்கள் அல்லது செயற்பாடுகளை உள்ளடக்கிய அல்லது உள்ளடக்காத பல்வேறு வரைவிலக்கணங்கள் உள்ளன.

உதாரணமாக, கீழே தரப்பட்டுள்ள வரைவிலக்கணம் தொழிற்சங்கங்களைத் தவிர்க்கிறது:

சிவில் சமூக அமைப்புகள் என்பவை தொண்டு நிறுவனங்கள், ஆலோசனை குழுக்கள், சமூக அமைப்புகள், மதநம்பிக்கை சார்ந்த குழுக்கள் மற்றும் தொழின்முறை சங்கங்கள் போன்ற பல வடிவங்களை எடுக்கலாம். ஆலோசனை, பொதுக் கல்வி, ஆய்வு, சேவை வழங்குதல் மற்றும் கூட்டு நடவடிக்கைக்காக குடிமக்களை நிலைமாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் சமூக மாற்றத்தை மேம்படுத்தவும், நீதமான மற்றும் சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கவும் அவர்கள் பாடுபடுகின்றன. (ADB, 2022) .

அதே வேளை, ஊளுழுகள் தொடர்பான பின்வரும் வரைவிலக்கணம் தொழிற்சங்கங்களையும் உள்ளடக்குகிறது:

தொழிற்சங்கங்கள், தொழில்கொள்வோர் சங்கங்கள் மற்றும் பிற சமூக குழுக்கள் போன்ற அரச சார்பற்ற குழுக்களை உள்ளடக்கிய சிவில் சமூக அமைப்புகள் அரசியல் நிகழ்ச்சி நிரலை அமைப்பதில் குடிமக்கள் செயலூக்கத்துடன் பங்கேற்பதற்கு வழி சமைக்க்கின்றன. ஓர் ஆர்வமுள்ள ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடு ஒன்றியத்தின் உறுப்புரிமைக்கான நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு சுறுசுறுப்பான சிவில் சமூகம் பங்களிப்பை நல்குகிறது (ஐரோப்பிய ஆணைக்குழு).

இந்த ஆய்வுக்கான CSOக்களை வரைவிலக்கணப்படுத்த முயலும்போது கருத்தில் கொள்ளப்பட்ட மற்றொரு அம்சம் வெளிநாட்டு அரசுகளின் சர்வதேச அபிவிருத்தி அலகான சர்வதேச அமைப்புகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமா என்பதாகும். CSOக்கள் பெரும்பாலும் நன்கொடைகள் மற்றும் தன்னார்வ ஆதரவை நம்பியே தமது பணியை நிறைவேற்றி பொது நலனுக்காக பங்களிப்பை நல்குகின்றன. இலங்கையில் உள்ள பல CSOக்கள் பாரிய சர்வதேச உதவி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களிடமிருந்து நிதியுதவி பெறுகின்றன. இதனாலேயே இந்த அமைப்புகளில் சில உண்மையிலேயே அரச சார்பற்றவையா? என்ற கேள்வியும் எழுகிறது (குணதிலக, 2006). இன்னொரு புறம், அரசாங்கங்கள் (அவற்றின் நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள்) மற்றும் உத்தியோகபூர்வ நன்கொடையாளர்களுக்கு இடையிலான இயங்கியல் உறவு குறிப்பிட்ட ஊளுழுக்களிம் விளைதிறனில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது (OECD, 2009). இந்த காரணமாகவே, நாம் வெளிநாட்டு அரசாங்க நிறுவனங்கள் அல்லது USAID போன்ற வெளிநாட்டு பணித்திட்டங்களை தவிர்த்தோம் இருப்பினும், கணக்கெடுப்பில் பங்கேற்ற சில நிறுவனங்கள் வெளிநாட்டு அரசாங்கத் தூதரகங்களிடமிருந்து நிதியுதவி பெற்றன என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஊளுழுக்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்ற விடயத்தில் காணப்படும் இவ்வாறான சிக்கல்களைக் கருத்திற்கொண்டு ஊளுழுக்களை வரைவிலக்கணப்படுத்துவது இந்த ஆய்வினைத் தொடங்கும் போது நாங்கள் எதிர்கொண்ட முதல் சவாலாகும். நாங்கள் புரிந்துகொண்ட மற்றொரு நியதியாவது, சர்வதேச அரசு சாரா நிறுவனங்களையும் (INGO) சேர்த்துக்கொள்ள வேண்டுமா என்பதாகும். இறுதியில், ஊளுழுக்கள் குறித்த ஐக்கிய நாடுகளின் வரைவிலக்கணங்களைப் பின்பற்றுவது என நாம் தீர்மானித்தோம்:

ஒரு சிவில் சமூக அமைப்பு (CSO) அல்லது அரச சார்பற்ற அமைப்பு (NGO) என்பது உள்ளூர், தேசிய அல்லது சர்வதேச அளவில் ஒழுங்கமைக்கப்பட்ட எந்தவொரு இலாப நோக்கற்ற, தன்னார்வ குடிமக்களின் குழுவையும் குறிக்கும். பணி சார்ந்த மற்றும் பொதுவான ஆர்வமுள்ள மக்களால் இயக்கப்படும், சிவில் சமூக அமைப்புகள் (CSOக்கள்) பல்வேறு சேவைகள் மற்றும் மனிதாபிமான செயற்பாடுகளை மேற்கொள்ளல், குடிமக்களது கவலைகளை அரசாங்கங்களுக்கு கொண்டு சேர்ப்பித்தல், கொள்கைகளை கண்காணித்தல் மற்றும் சமூக மட்டத்தில் அரசியல் பங்கேற்பை ஊக்குவித்தல் ஆகிய பணிகளைச் செய்கின்றன" (ஐநா, n.d.)

எவ்வாறெனினும், நாங்கள் தொடர்பு கொண்ட பல INGOக்கள் தாம் சிவில் சமூக அமைப்புகள் அல்ல எனக் கூறி ஆய்வில் பங்கேற்க மறுத்ததோடு ஒரு சில மட்டுமே ஆய்வில் பங்கேற்றன. நாம் சேகரித்த தரவை இது மாற்றவில்லை என்றாலும், CSOஇற்கு உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வில் இருந்த ஒரே குறை என்னவென்றால், நாம்

எதிர்பார்த்த பதில்களின் சாத்தியமான எண்ணிக்கையை நாம் அடையவில்லை என்பதாகும். அத்தோடு வரைவிலக்கணம் தொழிற்சங்கங்களை உள்ளடக்கியதாக இருக்கும் அதேசமயம் நாம் பின்பற்றத் தேர்ந்தெடுத்த வரைவிலக்கணமான ஐநா வரைவிலக்கணம் தொழிற்சங்கங்களை உள்ளடக்கவில்லை. தரவுகளில் இருந்து தொழிற்சங்கங்கள் தவிர்க்கப்பட்டிருந்தாலும், ஆடைத் தொழில் போன்ற தொழிலாளர் உரிமைகள் பிரசசினைகள் தொடர்பில் பணியாற்றும் CSOக்களை நாங்கள் அணுகினோம்.

இந்த ஆய்வின் ஆரம்பத்தில் ஆய்வுக்குழு CSOக்களின் வரைவிலக்கணத்தைத் தீர்மானித்தவுடன், இலங்கையில் இவ் அமைப்புகளின் வரலாறு மற்றும் அவற்றினால் மேற்கொள்ளப்பட்ட பணியின் நோக்கம் ஆகியவற்றைப் புரிந்துகொள்வது முக்கியமானது ஆகும். இலங்கையில் CSOக்களின் தோற்றம் குடியேற்றவாத காலத்தில் நிகழ்ந்தது. இந்த ஆரம்பகால CSOக்கள் 1812 இல் நிறுவப்பட்ட இலங்கை விவிலிய அமைப்பு மற்றும் 1853இல் நிறுவப்பட்ட இலங்கை இலக்கிய அமைப்பு போன்ற கிறித்தவ மதப் பிரசாரப்பணிகளை முன்னெடுத்த அமைப்புகளான இருந்தன. இந்த மதநம்பிக்கை சார் அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டமை பௌத்த, இந்து, முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட இலங்கையின் ஏனைய சமயங்களினதுல் CSOக்களின் எழுச்சிக்கும் தூண்டுகோலாக அமைந்தன. (ADB, 2013) (ஜெயசிங்க, 2007). இலங்கையில் உள்நாட்டுப் போரின்போதும், சுனாமிக்குப் பிந்தைய காலப்பகுதியிலும் ஊளுழுக்கள் முக்கிய பங்காற்றின.

CSOக்களினால் மேற்கொள்ளப்படும் பணியின் பரப்பைப் பொறுத்தவரை, மனிதாபிமான உதவிகளை வழங்குவது முதல் கொள்கை மாற்றங்களுக்கு ஆலோசனை வழங்குவது வரை பரந்த அளவிலான விடயப்பரப்புகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மகளிர் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், கல்வி மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற விடயங்கள் வார்ந்து அவை பணியாற்றுகின்றன. மேலும் CSOக்கள் சமூகங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு பாலமாகவும் செயல்படுகின்றன. அத்துடன் அவை கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கங்களை வகைக்கூற வைக்கும் பணிகளைச் செய்கின்றன.

எவ்வாறெனினும், இவ் ஆய்வின் நோக்கம், மகளிர் மற்றும் பெண்பிள்ளைகள் போன்ற ஒடுக்கப்பட்ட சமூகங்கள் தொடர்ப விசேட ஆர்வத்துடன், எதிர்பாராத அல்லது திடீர் வன்முறைக்கு பதிலளிக்கும் CSOக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்புக்கு மட்டுப்படுத்தப்பட்டது. எதிர்பாராத வன்முறையை வரைவிலக்கணக்கபடுத்துவது ஒரு பாரிய சவாலாக இருந்தது. இந்த அறிக்கையின் ஆய்வு வழிமுறையில் இந்த சவால் குறித்து நாங்கள் விரிவாக கலம்துரையாடினோம். அதேவேளை, எதிர்பாராத வன்முறை என்ற சொல் பல்வேறு வழிகளில் விளக்கப்படலாம் என்பதை நாம் முழுமையாக அறிவோம் என்பதை இங்கே மீண்டும் வலியுறுத்த வேண்டிய அவசியத்தை உணர்கிறோம். அதேபோன்று, திடீர் வன்முறை என்பது இயற்கை அனர்த்தங்களை உள்ளடக்குமென்பதால் இந்த ஆய்வில் இயற்கை அனர்த்தங்களை நாம் கருத்தில் கொண்டோம். அவ்வாறான அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக பணியாற்றிய CSOக்களை மட்டுமே நாம் அணுகினோம். நீண்ட காலத்தில் சுற்றுச்சூழலின் தாக்கங்கள் மக்களை பாதிக்கக்கூடும் என்றபோதிலும் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் தொடர்பில் நாம் கருத்திற்கொள்ளவில்லை. மேலும் சுற்றுச்சூழல் தொடர்பில் மீதொட்டமுல்ல குப்பை மண்சரிவு போன்ற மனிதனால் நிகழ்ந்த சுற்றுச்சூழல் அனத்தங்களையும் நாங்கள் கருத்திற் கொண்டோம். இது குறித்து மென்மேலும் ஆய்வு வழிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது வரைவிலக்கணங்கள் மற்றும் சில மாதகால ஆய்வுகளுக்குள் எம்மால் சாதிக்க இயலுமானவற்றை கவனமாகக் கருத்திற்கொண்டு இலங்கையிலுள்ள சிவில் சமூக அமைப்புகள் குறித்த ஒரு பொதுவான கண்ணோட்டத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நாட்டில் உள்ள ஊளுழுக்களின் வரலாறு மற்றும் வளர்ச்சி, அவற்றின் நிறுவனக் கட்டமைப்புகள் மற்றும் நிதி மூலங்கள் மற்றும் சமூகத்தில் அவற்றின் தாக்கம் ஆகியவற்றை ஆராய்கிறது. மேலும் இவ் அறிக்கை இலங்கையில் CSOக்கள் எதிரகொள்ளும் சவால்கள், அவற்றினது செயற்பாடுகள் மீதான அரசாங்க கட்டுப்பாடுகள் மற்றும் வளங்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் உள்ளிட்டவற்றையும் பகுப்பாய்வு செய்கிறது.

.

## ஆய்வு முறையியல்

இலங்கையில் ஊளுமுக்கள் ஏராளமாகவும் பரவலாகவும் இருப்பதனால் துல்லியமான தரவைப் பெற்றுக்கொள்வதற்கு தொகைசார் ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமானது. நாம் சில சவால்களை சந்தித்ததோடு, ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நாம் வரைதற்பலகைக்குத் மீளத் திரும்பினோம். ஆனால் செயன்முறையை நன்றாகச் சரிசெய்த பின்னர் இந்த ஆய்வின் முடிவுகளில் நாங்கள் திருப்தி அடைந்தோம். இது ஒரு தேசிய கணக்கெடுப்பு என்பதாலும், 150இற்கும் மேற்பட்ட மறுமொழிகளைப் பெற முடிந்ததாலும், சேகரிக்கப்பட்ட தரவுகள் ஊளுமுக்கள் பற்றியும், இலங்கையில் CSOக்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றியும் தெளிவான சித்திரத்தை வெளிப்படுத்துகின்றன என நாம் நம்புகிறோம்.

தொகைசார் தரவுகளின் மீதான பகுப்பாய்வு நிறைவடைந்ததன் பின்னர் பண்புசார் ஆய்வு நடத்தப்பட்டது. இது தொகைசார் தரவுகளுக்கு ஒரு

முத்தாய்ப்பாகவும், முதல் பார்வையில் விநோதமாகத் தோன்றிய தரவுகளைச் சரிபார்க்கும் ஒரு வழிமுறையாகவும் இருந்தது.

## தரவுத்தளம்

இந்த கருத்திட்டத்தின் முதல் கட்டம் இலங்கையில் CSOக்களுக்கான தரவுத்தளத்தை உருவாக்குவதாகும். அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம் ஒரு விரிவான பட்டியலைக் கொண்டிருந்தாலும், அனைத்து NGOக்கள் மற்றும் CSOக்களும் செயலகத்தில் பதிவு செய்யப்படவில்லை. சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் கம்பனிகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் அரச கண்காணிப்பைத் தவிர்ப்பதற்காக அவ்வாறு பதிவு செய்துகொள்ளப் பட்டனவாகவோ முறையான நிறுவனங்களாக நிறுவப்படாதனவாகவோ, அல்லது சமயம் சார்ந்த அடிமட்ட அமைப்புகளாகவோ காணப்படுகின்றன. அத்துடன், NGO செயலகத்தின் பட்டியல் இற்றைப்படுத்தப்படவில்லை. நாம் மேற்கொண்ட பின்னணிச் சரிபார்ப்பின்போது பட்டியலில் உள்ள பல பேமுக்கள் செயலிழந்ததைக் கண்டறிந்தோம்.

எனவே, அடிமட்ட அமைப்புகள் மற்றும் சமயம் சார்ந்த CSOக்களை உள்ளடக்கி எமது பட்டியலை விரிவுபடுத்தவும், நாம் சமீபத்தில் உருவாக்கிய தரவுத்தளத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் எழுதி அவர்கள் பணிபுரியும் அடிமட்ட நிறுவனங்களினது தொடர்புத் தகவலைக் கோரவும் முடிவு செய்தோம். இந்த அடிமட்ட நிறுவனங்கள் மற்றும் சமயம் சார்ந்த அமைப்புகளை தரவுத்தளத்தில் அறிமுகப்படுத்துவதோடு, முழு குழுவுக்கும் வினாக்கொத்தை மின்னஞ்சல் செய்வதற்கு உத்தேசித்தோம்.

இருப்பினும், எங்கள் ஆரம்பகட்ட மின்னஞ்சலுக்கு.்.கடிதத்துக்கு குறைவான மறுமொழிகளே வந்தன. ஒரேயொரு நிறுவனத்திடமிருந்து மறுமொழியைப் பெற்றோம். இன்னும் சில அமைப்புகள் விளக்கங்களைக் கோரினர், ஆனால் பெரும்பாலான அமைப்புகள் மறுமொழிகளை அளிக்கவில்லை. தரவுத்தளத்தில் பட்டியலிடப்பட்ட சுமார் 200 நிறுவனங்கள் இருந்தபோதிலும் எமது கோரிக்கைக்கு மறுமொழி அளிக்க அவற்றுக்கு எந்தக் கடமைப்பாடும் இல்லை என்பதை நாம் முழுமையாக அறிந்தவர்களாகவே இருந்தோம்.

எவ்வாறெனினும், CSOக்களை இனங்காணும்போது, ஆய்வுக்குழு ஒவ்வொரு அமைப்புகள் தொடர்பாகவும் பின்னணி தேடலை நடத்தியது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அவை செயற்படுகின்றனவா, அவை எங்கு அமைந்துள்ளன என்ற விடயங்கள் தொடர்பிலும், மிக முக்கியமாக, எதிர்பாராத வன்முறை தொடர்பான பிரச்சினைகள் சார்ந்து - குறைந்தபட்சம் இந்த வார்த்தையின் பரந்த வரையறைக்குள்ளாவது - அவர்கள் பணிபுரிந்தார்களா என்பது தொடர்பிலும் கண்டறிவதற்கு இந்த பின்னணித் தேடல் நடத்தப்பட்டது.

மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், விசேடமாக டுபுடீவு சமூகத்துடன் பணிபுரியும் பெரும்பாலான அமைப்புகள் தமது இணையதளத்திலோ அல்லது சமூக ஊடகத்திலோ தொடர்பு கொள்ளும் விவரங்களை வழங்குவதில்லை. தொலைபேசி அழைப்புகள் மூலம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டதால் (ஒவ்வொரு கேள்வியையும் எவ்வாறு விவரிப்பது என்பது குறித்து பயிலுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதோடு கணக்கெடுப்பு சிங்களம் அல்லது தமிழில் நடத்தப்பட்டாலும் தரவுகளின் ஒத்த தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில்

விவரிப்புச்சொற்களின் மொழிபெயர்ப்புகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன) சமூக ஊடகங்களில் இந்த அமைப்புகளுக்கு நேரடி செய்தி அனுப்புவது ஒரு தெரிவாகக் காணப்படவில்லை. எனவே, LGBT சமூகத்தின் தரவுகள் துல்லியமானவையாக இல்லாமல் இருக்கலாம். எவ்வாறெனினும் ஒரு சில நஅமஒப்புக்கள் மட்டுமே LGBT சிக்கல்களில் பிரத்தியேகமாக செயல்படுவது கண்டறியப்பட்டது.

## ஆய்வு அளவுருக்கள்

வினாக்கொத்தை உருவாக்கும் போது, CSOக்கள் அதிக அளவில் இருக்கும் குறிப்பிட்ட பிரதேசங்கள் மற்றும் அவை குறைவாக செயலாற்றும் பிரதேசங்கள் பற்றிய புரிதலைப் பெறுவதே எமது நோக்கமாக இருந்தது. CSOக்கள் எந்தெந்த முக்கிய பணிப் பிரதேசங்களில் கவனம் செலுத்துகின்றன? மேலும் எந்தப் பகுதிகளுக்கு அதிக பணிகளுக்கான தேவை உள்ளது? மற்றும் இந்த ஆய்வின் பிரதான கவனப்புள்ளியான எதிர்பாராத வன்முறைக்கு பதிலளிக்கும் போது CSOக்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றன? முதலானவை தொடர்பில் நாம் கவனம் செலுத்தினோம்.

முதலில் இவ் ஆய்வுக்கான காலகட்டமாக 2009 முதல் 2022 வரையான காலப்பகுதியை நாம் கண்டறிந்தோம். ஊளுழுக்களின் இன்றைய நடவடிக்கைகளை ஆராய்வதற்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்பதால் போருக்குப் பிந்தைய சூழலில் களப்பணியாற்றும் அமைப்புகளைப் பற்றி ஆய்வு செய்வதென தீர்மானித்தோம். இந்த 13 ஆண்டுகளில் நிகழ்ந்த வன்முறை முக்கிய நிகழ்வுகளை அடையாளம் காண நாம்ல் ஆவணங்களை தீவிரமாக ஆராய்ந்தோம். அனைத்து முக்கிய வன்முறை சம்பவங்களையும் நாம் கண்டறிந்து அட்டவணைப்படுத்தியவுடன், அவற்றை எதிர்பாராதவை மற்றும் எதிர்வுகூறியவை என வகைப்படுத்தினோம்.

ஏலவே குறிப்பிட்டபடி எதிர்பாராத வன்முறையை வரைவிலக்கணப்படுத்துவது ஒரு பாரிய சவாலாக இருந்தது. இவ் ஆய்வின் போது நம்மிடம் நாமே சில கேள்விகளை வினவினோம். அவையாவன:
எப்போதேனும் வன்முறை எதிர்பாராததாக இருக்குமா?
எவ் வகையான வன்முறைகள் எதிர்பாராததாகக் கருதப்படலாம்?
மகளிர் மற்றும் பெண்பிள்ளைகள், விசேட தேவையுடையவர்கள் போன்ற விளிம்புநிலைக் குழுக்களுக்கு எவ் வகையான எதிர்பாராத வன்முறைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும்?

உதாரணமாக, இலங்கையில் நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் பொதுமக்களைப் பொறுத்தவரை எதிர்பாராதவை எனக் கருதப்படலாம். ஆனால் தாக்குதல்களுக்கு முன்பே அக் கொடூரமான திட்டத்தை அரச அதிகாரிகள் அறிந்திருந்தனர். எனவே, இந்த சூழலில் எதிர்பாராதது பொதுமக்களை மட்டும் உள்ளடக்குமா அல்லது பொதுமக்கள் மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டையும் உள்ளடக்குமா? பிந்தையது எனில் முன்கூட்டியே அறியப்படாத வன்முறைச் செயல்களைக் குறிப்பிடுவது ஏறக்குறைய சாத்தியமற்றது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஏறக்குறைய ஆண்டுதோறும் நிகழ்ந்து வரும் முஸ்லிம் எதிர்ப்பு வன்முறையின் அண்மைக்காலத்தைத வரலாற்றைக் கருத்திற் கொண்டு முஸ்லிம் சமூகத்தின் மீதான தாக்குதல்கள் தொடர்பாக பல முஸ்லிம்கள் அஞ்சியதோடு அவற்றை எதிர்பார்க்கவும் செய்தனர். எதிர்பாராத வன்முறை என்பது ஒருவேளை தனிப்பட்ட முஸ்லிம் நபர்கள் மீதான தாக்குதல்களில் நிகழ்ந்திருக்கலாம். இன்னொரு புறத்தில் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் வன்முறைக்கு பயந்து மிகுந்த விழிப்புணர்வைக் கொண்டிருந்தாலும், அவர்கள் மீதான தாக்குதல் எந்த வடிவத்தை எடுக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது. நூற்றுக்கணக்கான சிங்களப் பெண்களை கருத்தடை செய்ததாக மருத்துவர் 'ஷாபி ஷிஹாப்தீன் மீது பொய்க் குற்றம் சாட்டப்பட்டது அல்லது ஹிஜாப் அல்லது நிகாப் அணிந்த பெண்கள் மீதான தாக்குதல் போன்றவை அவ்வகையில் அடங்கும்.

அதேபோன்று, கோட்டாகோகம ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில், அது இராணுவத்தினராலோ அல்லது சிவிலியன்களோ மேற்கொள்ள்ளப்படுவதற்கான அதிக சாத்தியக்கூறுகள் குறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் முழுமையாக அறிந்திருந்தனர். பலர் கண்ணீர்ப்புகைக்கு தயாராக வந்தனர். மேலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்ணீர்ப்புகை தாக்குதல்களில் இருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பது குறித்தும் கலவரம் வெடிக்கும் சூழ்நிலையை எவ்வாறு வழிநடத்துவது என்பது குறித்தும் செய்திகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன. எனவே, தாக்குதல்கள் குறித்த எதிர்பார்ப்பு முன்னறிவிக்கப்பட்ட அல்லது கணிக்கக்கூடிய வன்முறை இந்த ஆய்வுக்குப் பொருந்தாது.

கருத்திற்கொள்ள வேண்டிய மற்றொரு அம்சம் சூழல் சம்பந்தப்பட்ட எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை. இதற்கு ஒரு உதாரணம் மீதொட்டமுல்ல குப்பை மேடு மண்சரிவு. ஒருபுறம், இது குப்பைக் கிடங்கைச் சுற்றியுள்ள மக்களுக்கு எதிரான அரச வன்முறையாகக் கருதப்படலாம். அனர்த்தத்தின் அளவு ஒருபோதும் எதிர

பாராததால் அல்லது எதிர்வுகூறப்பட்டிருந்தாலும் குப்பைக் கிடங்கு எப்போது இடிந்து விழும் என்று தெரிந்திருக்கவில்லை என்பதால் இது எதிர்பாராதது அல்லது திடீர் என்று கருதப்படலாம். குடியிருப்பாளர்களுடனும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடனும் கொழும்பு மாநகர சபையுடனும் நேர்காணல்களுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், எமக்குக் குறைந்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால், போருக்குப் பிந்தைய வன்முறைச் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் அது ஆய்வின் எல்லைக்குள் பொருந்துமா என்பதை ஆராய்வதற்கு எங்களால் இயலவில்லை.

மக்களைப் பாதித்த இயற்கை அல்லது சூழல் சம்பந்தப்பட்ட அரச வன்முறைக்கு மற்றொரு உதாரணமாக மே 2021இல் விதிகப்பட்ட இரசாயன பசளை மீதான தடையைக் குறிப்பிடலாம். இது விவசாயிகளை மட்டுமல்லாது உணவு நெருக்கடியை ஏற்படுத்தியதன் மூலம் ஒட்டுமொத்த மக்களையும் பாதித்தது (ரீத் & குருவிட்ட, 2022) (குப்தா, 2022) (பார்கின் & ரத்னவீர, 2022) (ஜெயசிங்க & கோ'ல், 2022). இது எதிர்பாராததா அல்லது திடீரென நடந்ததா என்பது விவாதத்திற்குரியது. சிலரது கூற்றுப்படி இரசாயன பசளை மீதான தடையை வேறுவிதமாக அமுல்படுத்தியிருந்தால் அது வெற்றியடைந்திருக்க முடியும், அரசாங்கம் அதை கவலையீனமாகக் கையாள்கிறது என்பது நெருக்கடிக்கு வழிவகுத்தது (யங், 2022) (மெண்டிஸ், 2021).

கருத்திட்டத்தின் இந்த முக்கியமான அம்சம் தொடர்பில் ஆராயும்போது எதிர்பாராததாகக் கருதப்படும் வன்முறைச் சம்பவங்களை எங்களால் இனங்காண முடிந்தது. பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்க ஊழியர் குர்ரம் ேக் கொல்லப்பட்டது மற்றும் தங்காலையில் உள்ள ஓய்வு விடுதியில் அவரது தோழியை கூட்டுப் பலாத்காரம் செய்தமை போன்ற வன்முறைச் சம்பவங்கள் இதில் அடங்கும். எனவே, எதிர்பாராத வன்முறையில் கொலை செய்யப்பட்டவர்கள் அல்லது பாலியல் வல்லுறவு செய்யப்பட்டவர்கள் அடங்குவர். அவற்றில் குற்றத்திற்கு முன் அச்சுறுத்தல்கள் இல்லை. குறிப்பிடத்தகுந்த மற்றொரு அம்சமாக சமூக ஊடகங்களில் நடைபெறும் துஂ'பிரயோகம், அந்தரங்கத்தை இழிவுபடுத்தல் உள்ளிட்ட ஒரு தனிநபருக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஏனைய எதிர்பாராத வன்முறையைக் குறிப்பிடலாம். இவை மிகவும் குறுகிய உதாரணங்கள் என்பதால், எதிர்பாராத வன்முறை குறித்த விளக்கத்தை கணக்கெடுப்பின்போது பதிலளித்தவர்களிடமே விட்டுவிட முடிவு செய்தோம். எவ்வாறாயினும், வினாக்கொத்துகளில் சில உதாரணங்களையும் நாம் வழங்கினோம், இதனால் பதிலளித்தவர்கள் எவ்வாறான நிகழ்வுகளை எதிர்பாராத வன்முறையாகக் கருதலாம் என்பது குறித்து தெளிவு பெறுவார்கள். இன்னொரு புறம் பல்வேறு ஊளுழுக்கள் எவற்றை "எதிர்பாராத வன்முறை" என்று கருதுகின்றனர் என்பதை புரிந்துகொள்ளவும், எமது சொந்த சார்புநிலை அல்லது வரையறுக்கப்பட்ட அறிவின் காரணமாக கணக்கெடுப்பை வடிவமைக்கும் போது எதிர்பாராத வன்முறை"யாக நாம் கருதாதத சம்பவங்கள் தொடர்பில் ஊளுழுகளிடமிருந்து கற்றுக்கொள்ளவும் இது உதவும் என நாம் உணர்ந்தோம்.

## வினாக்கொத்து

அடுத்த கட்டம் கணக்கெடுப்பை வடிவமைப்பது ஆகும். நேரம் போதாமை காரணமாக, கணக்கெடுப்பை நிறைவு செய்வதற்கான தமது உறுதிப்பாட்டை பதிலளிப்பவர்கள் கைவிடுவதை நாங்கள் விரும்பாததால், வினாக்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டும் என எண்ணினோம். அவர்கள் செலவிடும் நேரத்துக்காக அவர்களுக்கு எந்தவிதமான இழப்பீடும் வழங்கப்படுவதில்லை என்பதாலும், அவர்களுக்கு தமது கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியிருப்பதனாலும், அவர்கள் கணக்கெடுப்பை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை. அதிக விடைகள் வழங்கப்படும் விகிதத்தை உறுதிப்படுத்த விரும்புவதனால் குறைந்த எண்ணிக்கையிலான வினாக்கள் முன்வைக்கப் படுகின்றன.

ஒரு சில வினாக்களுக்குள் நாம் அதனை மட்டுப்படுத்த வேண்டியிருந்ததால், நிச்சயமாக அது எமக்கு இன்னுமொரு சவாலாக அமைந்தது. இந்த ஆய்வின் மையமாக அமையக்கூடிய அக்கறை கொள்ள வேண்டிய பகுதிகளை சுருக்கியுள்ளோம். இறுதியில், கணக்கெடுப்புக்காக எம்மிடம் மொத்தம் 19 வினாக்கள் இருந்தன.

வினாக்கொத்து உருவாக்கப்பட்டவுடன், சில அரச சார்பற்ற நிறுவனங்களை அணுகி கூகுள் படிவங்களில் ஒரு சோதனை வெள்ளோட்டத்தை நிகழ்த்தினோம். ல்ல்நாம் எந்தவிதமான எதிர்மறையான பின்னூட்டத்தையும் பெறவில்லை. மேலும் தரவு சேகரிப்பு செயன்முறையிலோ அல்லது சேகரிக்கப்பட்ட தரவுகளிலோ எந்தவிதமான பாரிய சிக்கல்களையும் நாம் காணவில்லை.

## எழுமாறான மாதிரிகளின் தெரிவு

200 அமைப்புகளைக் கொண்ட தரவுத்தளமானது NGO செயலகப் பட்டியலில் காணக்கிடைத்த அமைப்புகள் மற்றும் எமது வலைப்பின்னல்கள் மற்றும் கூகுள் தேடல்கள் மூலம் கண்டறியப்பட்ட NGOக்கள் ஆகியவற்றின் கலவையாக இருந்ததால், இதனை நாம் எழுமாறான மாதிரிகளின் தெரிவாகக் கருதுகிறோம்.

கணக்கெடுப்பை பரப்பும்போது, எமது வலைப்பின்னல்கள் மற்றும் தரவுத்தளத்தில் உள்ள 200 நிறுவனங்களை மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தபால் சேவை மூலமாகவோ தொடர்பு கொள்வதில்லை என்று முடிவு செய்தோம். உயர் பதிலளிப்பு விகிதத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு நிறுவனத்தையும் தொலைபேசி மூலம் அழைத்து அவர்களது பதில்களை தொலைபேசியினூடாக சேகரிப்பது அவசியமாகும்.

இதனைச் செய்வதற்காக தொலைபேசி அழைப்பை எடுத்து CSOக்களிடமிருந்து தரவைச் சேகரிக்கும் பொருட்டு, நாம் கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றிற்குச் சென்று பட்டதாரி மாணவர்களை கட்டணம் செலுத்தப்படும் பயிலுநர்களாக ஆட்சேர்ப்பு செய்தோம்.

நாம் மொத்தமாக 20 பயிலுநர்களை பணியமர்த்தி கணக்கெடுப்பு குறித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இரண்டு பயிற்சிப்பட்டறைகளை நடத்தினோம். பயிற்சிப்பட்டறையின் போது, ஆய்வு எதனைப் பற்றியது, எவ் வகையான தகவலை நாம் எதிர்பார்க்கிறோம் என்பதனை விளக்கினோம். வினாக்கொத்தில் உள்ள ஒவ்வொரு வினாவையும் நாம ஆராய்ந்ததோடு ஒரு கேள்வி பதில் அமர்வையும் நடத்தினோம். 20 பயிலுநர்களில் ஒவ்வொருவருக்கும் தொடர்பு கொள்வதற்காக தரவுத்தளத்திலிருந்து 10 CSOக்களின் பட்டியல் வழங்கப்பட்டது. அழைப்புகளை மேற்கொள்ள முன்கட்டணம் செலுத்தப்பட்ட சிம் கார்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

## பயிலுநர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள்

- ☐ பயிலுநர்கள் 2022 டிசம்பரில் அழைப்புகளைச் மேற்கொண்டார்கள். பெரும்பாலான ஊளுழுக்கள் இந்த ஆண்டின் இந்த நேரத்தில் மிகுந்த வேலைப்பளுவுடன் இருந்ததனாலும், அவர்களது கருதிட்டப்பணிகளை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருந்ததனாலும் இது ஒரு சிக்கலை ஏற்படுத்தியது. அத்துடன் விடுமுறை காலம் என்பதால் அலுவலகங்கள் நேரகாலத்தோடு மூடப்பட்டது. பயிலுநர்கள் அணுகிய சில நிறுவனங்களில் இவ்வாறான நிலையே காணப்பட்டது.
- ☐ நிகழ்நிலையில் தமது இருப்பினைக் காண்பித்துக்கொண்ட போதிலும் உண்மையில் செயலிழந்துவிட்ட சில அமைப்புகள் வினாக்கொத்தை தமக்கு மின்னஞ்சலில் அனுப்புமாறி கோரியிருந்தாலும் பல பின்தொடர்தல் அழைப்புகளுக்குப் பிறகும் பதிலளிக்கவில்லை.
- ☐ பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளூர் சமூகங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றிய போதிலும் தாம் CSOக்கள் அல்ல எனக் கூறி கணக்கெடுப்புக்கு பதிலளிக்க மறுத்துவிட்டன.
- ☐ சில அமைப்புகளின் இணையதளங்கள் அல்லது சமூக ஊடகங்களில் பட்டியலிடப்பட்ட தொடர்பு இலக்கங்கள் செல்லுபடியற்றவை.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு பயிலுநர்கள் இவ்வாறான பிரச்சனைகளை எதிர்கொண்டால், குறிப்பாக CSOக்களிடமிருந்து பதிலைப் பெறாதபோது அதனை விரைவில் தமக்குத் தெரிவிக்குமாறு ஆய்வுக் குழு கோரியது. பயிலுநர்கள் எம்மை அணுகியபோது, அவர்களால் அடைய முடியாத அல்லது பதிலளிக்க CSOக்களுக்கு பதிலாக வேறு அமைப்புகளைக் கண்டறிய கூகுள் தேடல்களை மேற்கொண்டோம். இந்தச் செயன்முறையானது எதிர்பாராத வன்முறையில் குறித்த அமைப்பு செயற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த விரைவான பின்னணித் தேடலை உள்ளடக்கியது என்பது இங்கே மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. இந்த கூகுள் தேடல்களின் போது, சரியான அளவீட்டு நியதிகள் இல்லாததால் பல நிறுவனங்கள் நீக்கப்பட்டன. அதேபோன்று வறிய மக்களுக்கு உணவு வழங்கும் அமைப்புகள் உள்ளிட்ட பொதுமக்களுடன் பணிபுரியும் சில அமைப்புகளும் தெளிவாக எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை வகைக்குள் வரவில்லையென்பதால் அகற்றப்பட்டன.

இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான ஊளுழுக்கள் இருப்பதால் புதிய அல்லது மாற்று CSOக்களைக் கண்டறிவது கடினமாக இருக்கவில்லை. எனினும் பின்னணியை ஆராய்வது அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளும் ஒரு செயன்முறையாகும்.

இறுதியில் பயிலுநர்களுக்கு சுமார் 45 மாற்று அமைப்புகள் வழங்கப்பட்டதோடு அமைப்புகளின் மொத்த எண்ணிக்கை 245 ஆக உயர்ந்தது. 245 அமைப்புகளில் மொத்தம் 158 அமைப்புகள் எம்மிடம் பதிலளித்திருந்தன. மேலும் தவறான அல்லது போலி அமைப்புகள் அகற்றப்பட்டவுடன், மொத்தம் 15 அமைப்புகள் எஞ்சியிருந்தன.

## தரவுகளை அட்டவணைப்படுத்துதல்

இந்த அறிக்கையின் பகுப்பாய்வுப் பிரிவில் வழங்கப்பட்ட தரவுகள் நாம் சேகரித்த முழுமையான தரவுத்தொகுப்புகளை உள்ளடக்கியது. அத்துடன் CSOக்கள் எந்தெந்த பகுதிகளில் எதிர்பாராத வன்முறைக்கு முகம் கொடுத்தபடி செயல்படுகின்றன, அவை அரச ஆதரவைப் பெறுகின்றனவா, ஓர் ஆண்டில் நடத்தப்படும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை என்ன போன்ற வினாக்களுடன் குறிப்பிட்ட மாவட்டங்கள் தொடர்பில் தரவுகளை சேகரித்து ஆய்வுக்கு மற்றொரு பரிமாணத்தையும் நாம் வழங்கியுள்ளோம்.

பகுப்பாய்விற்கு தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் அதிகமான CSO செயற்பாடுகளைக் கொண்ட மட்டக்களப்பு உள்ளடங்கியது. யாழ்ப்பாணம், மன்னார், காலி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களும் ஆய்வில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். அத்துடன் நாட்டின் வடக்கு, மேற்கு, கிழக்கு மற்றும் தெற்கில் ஊளுழுக்களின் இருப்பு மற்றும் பணிகள் குறித்த நியாயமான குறுக்குவெட்டையும் வழங்குகின்றன.

## பண்புசார் தரவுகள்


தொகைசார் தரவுகள் நிறைவடைந்ததும், தொகைசார்ல் தரவுகளுக்கு ஒரு பூரணத்துவத்தை வழங்கும் பண்புசார் தரவுச் சேகரிப்பை நடத்தினோம். பெரும்பாலும் தெளிவுபடுத்துதல் அல்லது குறிப்பிட்ட கேள்விகளில் கூடுதல் தரவைக் கண்டறிதல் ஊடாக அதனை மேற்கொண்டோம். உதாரணமாக, CSOக்கள் மட்டக்களப்பில் அதிக ஆர்வம் காட்டுவதை நாங்கள் கவனித்தோம். இது மட்டக்களப்பில் உள்ள CSOக்களில் பணிபுரியும் தனிநபர்கள் அவர்களது குழுவுடன் எவ்வாறு செயற்படுகிறார்கள், ஏன் ஊளுழுக்களுக்கு மட்டக்களப்பு மீது அதிக ஆர்வம் உள்ளது என்பதைப் பற்றி மேலும் அறிவதற்கான நேர்காணல்களை நடத்தத் தூண்டியது. ஊளுழுக்கள் தொடர்பில் அரசாங்கத்தின் பார்வை என்ன என்பதை அறிய மட்டக்களப்பில் உள்ள பிரதேச செயலாளருடன் உரையாடினோம்.

இந்த நேர்காணல்களின் போது, மட்டக்களப்பில் அரசுக்கும் CSOக்களுக்கும் இடையில் நெருக்கமான மற்றும் கிட்டத்தட்ட பிரிக்க முடியாத உறவு இருப்பதைக் கண்டறிந்தோம். பிரதேச செயலகத்தில் உள்ள NGO செயலகப் பிரதிநிதியுடன் ஊளுழுக்கள் மிக நெருக்கமாகப் பணிபுரிகின்றன. பின்தொடர் பணியாக ஊளுழுக்களின் ஆர்வம் மிகவும் குறைவாக இருந்த பொலன்னறுவை மாவட்டத்தின் பிரதிநிதி உட்பட நாம் ஆய்வினை மேற்கொண்டிருந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள NGO செயலகப் பிரதிநிதிகளையும் தொடர்பு கொண்டோம்.

மட்டக்களப்பில் CSOக்கள் ஏன் அதிக ஆர்வம் காட்டுகின்றன, எவ்வாறு அல்லது ஏன் CSOக்களும் பிரதேச செயலகங்களும் நாட்டில் வேறு எங்கும் காணப்படாத அளவுக்கு ஒப்பீட்டளவில் சிறப்பாகச் செயற்படுகின்றன என்பதைப் பற்றி மேலும் அறிய ஆர்வமாக இருந்தோம். மட்டக்களப்பில் உள்ள CSOக்களின் வரலாற்றைப் புரிந்துகொள்வதற்காக நாங்கள் ஆவணங்களை ஆராய்ந்தோம். மற்றும் சூரியா மகளிர் அபிவிருத்தி அறக்கட்டளையைச் சேர்ந்த சரளா இம்மானுவேலை நேர்காணல் செய்தோம். அது குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தில் அதிகமான CSOக்கள் இயங்குவதற்கும் ஏனைய சிலவற்றில் ஏன் அவ்வாறு இயங்காமைக்கும் ஏதுவான பல்வேறு காரணிகளைப் புரிந்துகொள்வதற்கு உதவிகரமானதாக இருந்தது.

# தொகைசார் தரவுப் பகுப்பாய்வு

1. தற்போதைய மற்றும் முந்தைய கருத்திட்ட அமைவிடங்கள் (அடிப்படை அமைவிடம் தவிர)





கணக்கெடுப்பின் பதிலளிப்புகளின் அடிப்படையில் - 153 பதிலளிப்புகளில் 60 என்ற எண்ணிக்கையுடன் - பெரும்பாலான அமைப்புகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றியுள்ளன. பொலன்னறுவை மாவட்டத்தில் மிகக்குறைந்த எண்ணிக்கையில் 25 அமைப்புக்கள் கருத்திட்டங்களை முன்னெடுத்திருந்தன.

பதிலளித்தவர்களில் 20 பேர் தமது அமைப்புகள் 25 மாவட்டங்களிலும் பணியாற்றியதாகக் கூறினர். எனவே, தரவைக் காட்சிப்படுத்தும்போது இந்த 20 பேரையும் ஒவ்வொரு மாவட்ட வகையிலும் சேர்த்துள்ளோம். இருப்பினும் 20 அமைப்புகள் அனைத்து மாவட்டங்களிலும் பணியாற்றுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை மேற்கொள்கின்ற அதேவேளை ஒரு சில அமைப்புகள் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை மட்டுமே மேற்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட 20 பதிலளித்தவர்கள் மத்தியில் அடுத்தடுத்த பொதுவான விடயங்களாக நிவாரணப் பணிகளையும், ஆய்வு அறிக்கைகளையும் குறிப்பிடலாம்.

மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான வேலைத்திட்டங்கள் மகளிர், பெண்பிள்ளைகள் மற்றும் வறுமை தொடர்பானவை ஆகும். பொலன்னறுவையில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான வேலைத்திட்டங்கள் மகளிர், பெண்பிள்ளைகள், வறுமை, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் (இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித செயற்பாடுகளால் நிகழும் அனர்த்தங்கள்) ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது.

2. பணியின் முக்கியமான பரப்புகள்





வரைபு 2இல் (பணியின் முக்கியமான பரப்புகள்) வழங்கப்பட்ட தரவுகளை வாசிக்கும்போது மனதில் கொள்ள வேண்டிய சில விடயம் யாதெனில், பணியின் ஒவ்வொரு பகுதியும் தனிமைப் படுத்தப்படாதவை என்பதாகும். அவை மற்ற பகுதிகளுடன் குறுக்கிடலாம். ஆனால் இந்த வரைபானது 153 ஊளுழுக்களையும் ஆய்வு செய்யும்போது ஒவ்வொரு பணிப்பரப்பு மீதும் குவிக்கப்படும் ஒட்டுமொத்த கவனத்தையும் வெளிப்படுத்துகிறது. உதாரணமாக, ஒரு ஊளுழு வறுமையில் உள்ள மகளிர் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பில் பணியாற்றலாம் இதில் அவர்கள் மகளிர் மற்றும் பெண்பிள்ளைகள் மற்றும் வறுமை ஆகியவற்றை கணக்கெடுப்பின் போது தெரிவு செய்வார்கள். மற்றொரு ஊளுழு மகளிர் மற்றும் விசேட தேவையுள்ள பெண்பிள்ளைகள் தொடர்பில் பணியாற்றலாம். அவர்கள் இரண்டு விடயங்களையும் தெரிவு செய்யலாம். எமது ஆய்வு குறுக்குவெட்டுகளைப் பொருட்படுத்தாது எவ்வெந்தப் பகுதிகள் அதிக கவனத்தைப் பெறுகின்றன என்பதைக் கண்டறிவதற்காக இந்த தெரிவுகளை வேறுபடுத்துகிறது.

கருத்திற் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கிய அம்சம் யாதெனில், பொருளாதார அபிவிருத்தி“ மற்றும் “வறுமை“ ஆகியவற்றுக்கு இடையேயான வித்தியாசம் இவ் ஆய்வுக்காக அவை எவ்வாறு வகைமைப் படுத்தப்பட்டுள்ளன என்பதாகும். பொருளாதார அபிவிருத்தி என்பது ஒரு சமூகத்துக்கு உதவுவதைக் குறிக்கிறது - இது சில சந்தர்ப்பங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இல்லாத சுமூகங்கள் தொடர்பாகவும் மேற்கொள்ளப் படலாம். வறுமை என்பது வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் தனிநபர்கள் அல்லது குழுக்கள் தொடர்பான பிரச்சினைகளைக் குறிக்கிறது.

ஏனையவை என்ற வகையை தெரிவு செய்த ஊளுழுக்கள் காணாமலாக்கப்பட்டவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் மற்றும் மருத்துவ.்.சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பிலான திடீர் அல்லது எதிர்பாராத வன்முறையுடன் சம்பந்தப்பட்ட நிலைமைகளில் தாம் பணியாற்றியதாக சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது.


**2.1. பின்வரும் வரைபு அறிக்கையிடப்பட்ட முக்கிய பணிப் பரப்புகளுக்கான மாவட்ட ரீதியான தரவைக் காட்டுகிறது. (மாவட்டங்கள்: மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், காலி, குருநாகல்)**




வரைபு இல. 2 இன் படி, குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், மகளிர் மற்றும் பெண்பிள்ளைகள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமை ஆகியவை தொடர்ச்சியாக முக்கியத்துவம் பெறும் பணிப்பரப்புகளாக இருந்தன. வரைபு இல.1 மட்டக்களப்பில் அதிக அளவான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதையும் பொலன்னறுவையில் குறைந்த கவனம் செலுத்தப்படுவதையும் எடுத்துக்காட்டுகிறது. மேலே உள்ள வரைபு (வரைபு 2.1) குறித்துரைக்கப்பட்ட மாவட்டங்களான மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், காலி, குருநாகல் ஆகியவை தொடர்பில் வேறுபடுத்தப்பட்ட பணிப்பரப்புகளின் அடிப்படையிலான தரவுகள் மீதான கண்ணோட்டத்தை வழங்குகிறது.


பெறுபேறுகளின் அடிப்படையில், இந்த வெவ்வேறு மாவட்டங்களில் கூட கவனம் செலுத்தும் பரப்புகள் ஒரு குறிப்பிட்ட போக்கினைத் தக்கவைத்துக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. குருநாகல் மாவட்டத்தில் மகளிர் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு சமமான கவனம் வழங்கப்படுகிறது. இருப்பினும் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த முன்னுரிமை மகளிர் மற்றும் பெண்பிள்ளைகள் என்ற பணிப்பரப்புக்கு வழங்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும் வறுமை என்ற பணிப்பரப்பு குறைவான கவனத்தைப் பெறுகிறது. இலங்கை 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கும் சூழ்நிலையில் ஊளுழுக்களைப் பொறுத்தவரை ஆராய்வதற்கான சாத்தியப்பாடு உள்ள ஒரு பணிப்பரப்பாக இது காணப்படுகிறது.

## 3. அமைப்புகளினால் ஆற்றப்படும் பணிகளின் வகைகள்




இந்த தரவுகளின் அடிப்படையில், பெரும்பாலான அமைப்புகள் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளன. இதைத் தொடர்ந்து கல்வி மற்றும் சமூகக் கட்டியெழுப்புதல் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 4மூ ஆன சிறுபான்மையான அமைப்புகள் ஏனைய பணிகளில் ஈடுபட்டுள்ளன. ஏனையவை என்ற தெரிவை தெரிந்தெடுத்த அமைப்புகள் உளவளத்துணை, சமூக நகர்வு, சட்ட ஆலோசனை மற்றும் ஏனைய ஆதரவு சேவைகள் போன்ற விடயங்களில் ஈடுபட்டுள்ளனர்.

## 3.1 District disaggregated type of work





வரைபு 3.1ஆனது இந்த மாவட்டங்களில் ஊளுழுக்கள் ஆற்றும் பணியின் வகைகளை மாவட்டரீதியாக பிரிக்கப்பட்ட தரவு ஆகும். இங்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாவட்டங்களிலான நாடளாவிய தரவுகளின் போக்கும் காட்டப்படுகிறது. ஒரே வித்தியாசம் யாதெனில், மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் ஆகியவை சமூகக் கட்டியெழுப்பலுக்கு இரண்டாவது முன்னுரிமை வழங்குகின்றன. அதேவேளை, காலி மாவட்டம் கல்வி தொடர்பில் ஓரளவு அதிக அக்கறை காட்டுகிறது. எவ்வாறெனினும், வேலைத்திட்டத்தின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை இவ் வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கவை அல்ல..

## 4. இவ் வேலைத்திட்டங்களுக்கு நீங்கள் நிதியைப் பெற்றுள்ளீர்களா அல்லது அவை நிதியளிக்கப்படாத∴தன்னார்வப் பணியா??




பதிலளிப்புகளின்படி, 54மூ வேலைத்திட்டங்கள் தன்னார்வ அடிப்படையிலானவை. மீதமுள்ள வேலைத்திட்டங்கள் நிதியளிக்கப்பட்டவை. 14மூ வேலைதிட்டங்கள் மட்டுமே தன்னார்வ அடிப்படையிலானவை. பங்கேற்பாளர்களுக்கு “ஏனையவை“ என்பதைத் தேர்ந்தெடுக்கவும் வினாவில் உள்ளடங்காத அம்சங்களைச் சேர்க்கவும் தெரிவு வழங்கப்பட்டது. ஏனைய முறைகளின் கீழ், கீழ்க்கண்டவை சேர்க்கப்பட்டுள்ளன. நிலமட்ட வேலைத்திட்டங்களுக்கு நிதியளிக்க ஆலோசனைச் சேவைகளின் இலாபம் பயன்படுத்தப்படும். வேலைத்திட்டங்களுக்கு தெரு நாடகங்களில் நடித்து பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படும். பெருவணிகங்களின் சமூகப் பொறுப்புப் பிரிவாக இருக்கும் சில ஊளுழுக்கள், தமது தாய் நிறுவனத்தினால் முழுமையாக நிதியளிக்கப்படுவதாகக் குறிப்பிட்டன.

### 5. கடந்த 2 ஆண்டு காலப்பகுதியில் உங்களது நிறுவனம் எத்தனை வேலைத்திட்டங்களை நிறைவு செய்துள்ளது அல்லது ஈடுபட்டுள்ளது?





இந்த வரைபு ஊளுழுக்களிடம் உள்ள வேலைத்திட்டங்களை இயக்கும் திறனை வெளிப்படுத்துகிறது. பெரும்பாலான அமைப்புகள் 1 முதல் 5 வரையிலான சில வேலைத்திட்டங்களை இரண்டு ஆண்டுகளுக்குள் செயல்படுத்துகின்றன. 19 அமைப்புகளுக்கு இரண்டு ஆண்டுகளில் 21 அல்லது அதற்கு மேற்பட்ட திட்டங்களை செயல்படுத்த முடிந்தது. 21 மற்றும் அதற்கு மேற்பட்ட வேலைத்திட்டங்களை நிறைவு செய்த வகையை குறிப்பிட்ட சில ஊளுழுக்கள் அவை நிவாரணம் வழங்குவது போன்ற குறுகிய வேலைத்திட்டங்கள் என்று விவரித்தன. பொருந்தாது என பதிலளித்த அமைப்புகள், கடந்த இரண்டு ஆண்டுகளில் (2020 மற்றும் 2021) கொவிட்-19 பெருந்தொற்று போன்ற பல காரணங்களால் எந்தத் வேலைத்திட்டங்களையும் செயல்படுத்த முடியவில்லை எனக் கூறின.

### 6. இந்தத் வேலைத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும்போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?




கணக்கெடுப்பு பதிலளிப்புகளின்படி, 87 அமைப்புகளில் பெரும்பான்மையானவர்கள் எதிர்கொள்ளும் பொதுவான சவாலாக வரையறுக்கப்பட்ட வளங்கள் என்ற விடயம் காணப்படுகிறது. கொவிட்-19 பெருந்தொற்று, அரசியல் ஸ்திரமின்மை, இராணுவத் தலையீடுகள் போன்றவை வேலைத்திட்டங்களுக்கான ஏனைய சவால்களாக வகைப்படுத்தப்பட்டன. ஒப்பீட்டளவில், பாதகமான அரசின் தலையீடு மிகச் சில அமைப்புகளால் ஒரு சவாலாக இனங்காணப்பட்டது.

### 7. பொதுவாக அரசு (அமைச்சு மட்டம்) நீங்கள் அதனை அணுகும்போது உங்களுக்கு ஆதரவு அளிக்கிறதா?




பதிலளித்தோரில் 33மூ ஆனோர் தமது வேலைத்திட்டங்களுக்கு அரசு அல்லது அமைச்சக அளவிலான ஆதரவு எப்போதும் கிடைக்கப்பெற்றதாகக் குறிப்பிட்டனர். அதேவேளை ஏறக்குறைய 38மூஆனோர் போதுமான ஆதரவு கிட்டவில்லை எனக்குறிப்பிட்டனர். பதிலளித்தவர்களில் இருபத்தொன்பது சதவீதமானோர் நடுநிலை வகித்தனர். எவ்வாறாயினும், அமைச்சு மட்டத்தை நாம் அமைச்சுகள் எனப் புரிந்து கொண்டாலும், பதிலளித்தவர்களில் சிலர் மாகாண சபைகள் என்று அர்த்தப்படுத்தியதை நாம் பின்னர் கண்டுகொண்டோம் என்பதை இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும்.


### 8. அரசு (உள்ளூராட்சி மன்றம்) நீங்கள் அதனை அணுகும்போது உங்களுக்கு ஆதரவு அளிக்கிறதா?



பெரும்பாலான ஊளுழுக்கள் உள்ளூராட்சி மன்றம் தமது பணிக்கு ஆதரவாக இருப்பதாகக் குறிப்பிட்டன. முப்பத்தாறு அமைப்புகள் நடுநிலை வகித்தன, 46 அமைப்புகள் ஆதரவு கிட்டவில்லை எனக் குறிப்பிட்டன.


பின்வரும் தரவுகள் உள்ளூராட்சி மன்ற ஆதரவு தொடர்பாக பெறப்பட்ட பதிலளிப்புகளுக்கான மாவட்டரீதியிலான தரவுகள் ஆகும். முன்னிலைப்படுத்தப்பட்ட மாவட்டங்கள்: மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், காலி, குருநாகல்.

### 8.1 மாவட்டரீதியிலான உள்ளூராட்சி மன்ற ஆதரவு





வரைபின்படி, மட்டக்களப்பில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பிராந்தியத்தில் உள்ள ஊளுக்களுக்கு மிகவும் ஆதரவாக உள்ளன. காலியில் உள்ளூராட்சி மன்றத்தின் ஆதரவு போதுமானது, போதுமானதாக இல்லை எனக் குறிப்பிடும் ஊளுழுக்கள் ஏறக்குறைய சம எண்ணிக்கையில் உள்ளன. பதிலளித்த ஒவ்வொரு தொகுதியினரும் எவ்வெந்தப் பரப்புகளில் பணி ஆற்றுகிறார்கள் என்பதை இனங்காண்பது சுவாரசியமானதாக இருக்கும். இதன் மூலம் குறிப்பிட்ட பரப்புகள் சார்ந்த வேலைத்திட்டங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் அதிக ஆதரவு வழங்குகின்றனவா அல்லது உள்ளூராட்சி மன்றங்களது ஆதரவு தன்னிச்சையானதா என்பதைக் கண்டறியலாம்.

### 9. நீங்கள் பணி ஆற்றும் சூழலின் பொதுமக்கள் அல்லது சமூகங்களை நீங்கள் அணுகும் போது அவர்கள் பொதுவாக உங்களை ஏற்றுக்கொள்கிறார்கள் எனக் கூற இயலுமா?




பங்கேற்பாளர்களில் எழுபத்து மூன்று சதவீதம் பேர் (110 CSOக்கள்) சமூகங்கள் எப்போதும் வேலைத்திட்டங்களுக்கு ஏற்றுக்கொள்வதாகவும், போதுமான ஆதரவைக் காட்டுவதாகவும் கூறினர். இருப்பினும், பதிலளித்தவர்களில் சுமார் 7மூ (10 CSOக்கள்) சமூகம் இந்த வேலைத்திட்டங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டனர்.

### 9.1 மாவட்டரீதியிலான சமூகத்தின் ஏற்றுக்கொள்ளும் தன்மை




யாழ்ப்பாணம் மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள ஊளுழுக்கள் தமது வேலைத்திட்டங்களை நிறைவேற்றும்போது சமூகங்கள் புறத்திருந்து சில சவால்களை எதிர்கொண்டதாகத் தெரிகிறது. இங்கும் சமூகங்கள் எவ்வெந்தப் பணிப் பரப்புகளை ஏற்கவில்லை, அல்லது ஏனைய சிக்கல்கள் தொடர்பில் மேலதிகமாக விசாரித்தறிய வேண்டுமா என்பதைக் கண்டறிவது சுவாரசியமானதாக இருக்கும்.

### 10. பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகளில் நீங்கள் பணியாற்றுவீர்கள் எனில், அவர்கக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்ஃநிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும்போது ஏதனும் சவால்கள் ஏற்படுகின்றனவா? அவை யாவை?




சுமார் 28 நிறுவனங்கள் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பான வேலைத்திட்டங்களை நடத்தும்போது சமூகத்தின் எதிர்ப்பை மிகப்பெரிய சவாலாக கருதுவதாக கணக்கெடுப்பு பதிலளிப்புகள் வெளிப்படுத்துகின்றன. நாற்பத்தெட்டு அமைப்புகள் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பான வேலைகளில் எந்த விதமான சவாலையும் தாங்கள் காணவில்லை எனச் சுட்டிக்காட்டின.
மேலும் 3 அமைப்புகள் குடும்பப் பொறுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதால், நிகழ்ச்சிகளில் பெண்கள் பங்கேற்க இயலாமல் போதல் போன்ற ஏனைய சவால்களைக் குறிப்பிட்டுள்ளன.

### 11. உங்களது அமைப்பு எப்போதாவது... (வேலைத்திட்டங்களை நிறைவு செய்தல்)




பெரும்பாலான அமைப்புகள் சவால்களைச் சந்திக்க நேர்ந்தாலும் கூட வடிவமைக்கப்பட்ட ஒவ்வொரு திட்டத்தையும் எப்பொழுதும் சரியாக முடிக்க தம்மால் முடிந்ததாகக் குறிப்பிட்டன. எவ்வாறாயினும், இந்த உயர்வுநவிற்சியான பதிலைப் பற்றி நாங்கள் எச்சரிக்கையாக இருக்கிறோம. இருப்பினும், பண்புசார் ஆய்வுக்காக நேர்காணல் செய்யப்பட்ட அமைப்புகள் பெருந்தொற்று மற்றும் எரிபொருள் பற்றாக்குறை என்பன தமது வேலைத்திட்டங்களை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவேற்றும் திறனை பெரிதும் பாதித்ததாகவோ அல்லது அதன் காரணமாக வேலைதிட்டங்களை மாற்ற வேண்டியிருந்ததாகவோ குறிப்பிட்டன. இருப்பினும்கூட, மிகவும் சிறுபான்மையான அமைப்புகள் மட்டுமே திட்டங்களை முழுமையாக கைவிட வேண்டியிருந்ததாகக் குறிப்பிட்டன. எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இலங்கையிலுள்ள ஊளுழுக்கள் மிக அரிதாகவே வேலைத்திட்டங்களை கைவிடுகின்றன.


### 12. எதிர்பாராத அல்லது திடீர் வன்முறையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் நீங்கள் பணியாற்றுகிறீர்களா? ஐஉதாரணம்: ஈஸ்டர் குண்டுவெடிப்பு, இயற்கை அனர்த்தங்கள், கலவரங்கள், துஷ்பிரயோகம், கொலை முதலியனஸ டசமயகமய ழஎுெ டுறு ( அனையைடஞ் கனெயபெ அழுலனசா" யைதனேட றனஅ" கடனயஇனலஇ" றஅகானயஉ ம" ,ன்ம ாமனழளாரூ



59மூ (n = 88) அமைப்புகள் அவர்களது பணி எதிர்பாராத அல்லது திடீர் வன்முறைக்கு எதிர்வினையாற்றுவதை உள்ளடக்கியது என பதிலளித்தனர். அதே நேரத்தில் 41மூ (ெ ஸ்ரீ62) அவர்கள் அத்தகைய நிலைமைகளுக்கு எதிர்வினையாற்றவில்லை எனக் கூறியுள்ளனர். எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை தொடர்பாக திண்ணமாக பணியாற்றாததால் ஒரு ஊளுழுவை அகற்றுவதற்கு முன், அல்லது எதிர்பாராத வன்முறை தொடர்பாக பணியாற்றியதற்காக ஆய்வுத் தொகுதியில் ஊளுழுக்களை உள்ளடக்குவதற்கு முன், ஆராய்ச்சிக் குழு ஒவ்வொரு ஊளுழுஇனது பணிகளையும் சுருக்கமாக மதிப்பிட்டதால் இந்த பதில்கள் மிகவும் சுவாரசியமாக இருந்தன.


எதிர்பாராத வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் ஊளுழுக்கள் செயல்படுகின்றனவா என்பதை மதிப்பிடுவதற்கு சில உதாரணங்கள் வழங்கப்பட்டாலும், பதிலளித்தவர்களில் பாதிக்கும் குறைவானவர்கள் எதிர்பாராத வன்முறை தொடர்பான தமது பணியை அல்லது அதன் ஒரு பகுதியைக்கூட கருத்தில் கொள்ளவில்லை. ஊளுழுக்கள் தமது பணியை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கும், எதிர்பாராத வன்முறை பற்றிய நமது வரையறைகளை மதிப்பீடு செய்வதற்கும், கணக்கெடுப்பில் பதிலளித்தவர்களிடம் எதிர்பாராத வன்முறை தொடர்பிலான வினாக்களை நேரடியாக முன்வைப்பது முக்கியம்.

### 12.1 மாவட்டரீதியாக எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் பணியாற்றியமை தொடர்பில் ஆம் என பதிலளித்தவர்களின் விவரம்





குறிப்பாக இந்த ஆய்வின் மையமாக இருக்கும் ஐந்து மாவட்டங்களையும் எதிர்பாராத வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் பணியாற்றியமை தொடர்பில் “ஆம்“ என்று பதிலளித்த மொத்த பதிலளித்தவர்களில் 59மூ ஆனோரையும் வைத்துப் பார்க்கும்போது எதிர்பாராத வன்முறை தொடர்பான பெரும்பாலான வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படுத்தப்படுவதைக் கண்டறிய முடிந்ததி. இதனைத் தொடர்ந்து காலி மாவட்டமும் அடுத்த இடத்தில் மன்னார் மாவட்டமும் இருந்தன. ஐந்து மாவட்டங்களில் மிகக் குறைவான வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவது யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் மாவட்டங்களிலாகும்.

### 12.2 பிரதான பணிப் பரப்பு அடிப்படையில் எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் பியற் ியமை தொடர்பில் ஆம் என பதிலளித்தவர்களது விவரம்





மீண்டும் குறிப்பாக எதிர்பாராத வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் பணியாற்றியமை தொடர்பில் “ஆம்“ என்று பதிலளித்த மொத்த பதிலளித்தவர்களில் 59மூ ஆனோரது தரவுகளை பிரதான பணிப்பரப்புகள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தரவுகளுடன் தரவுகளை ஒப்பிட்டுப் பார்த்தோம். மேற்படி தரவுகள் எதிர்பாராத வன்முறைகள் சார்ந்து பணியாற்றும் அமைப்புகளில் பெரும்பாலானவை பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் தொடர்பிலும், அடுத்ததாக பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பிலும், அடுத்ததாக பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும், இறுதியாக வறுமை சார்ந்த பிரச்சினைகள் தொடர்பிலும் செயல்படுகின்றன என்பதை வெளிப்படுத்தின.

### 12.3 பணி வகையின் அடிப்படையில் எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் பணிய றியமை தொடர்பில் ஆம் என பதிலளித்தவர்களது விவரம்





எதிர்பாராத வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் பணியாற்றியமை தொடர்பில் “ஆம்“ என்று பதிலளித்த மொத்த பதிலளித்தவர்களில் 59மூ (ஒரீ90.3) ஆனோரை வைத்துப் பார்க்கும்போது பெரும்பாலானவர்கள் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களில் பணியாற்றியுள்ளனர். இவற்றுள் இலங்கையில் தற்காலிகமாக பர்தா மீது தடை விதிக்கப்பட்டபோது ஹிஜாப் மற்றும் நிகாப் அல்லது புர்கா இடையே உள்ள வேறுபாட்டைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்ற வேலைத்திட்டங்கள் உள்ளடங்கும். ஏனை வேலைத்திட்ட வகைகளில் கல்வி வேலைதிட்டங்கள், சமூகக் கட்டியெழுப்புதல் வேலைத்திட்டங்கள் மற்றும் நிவாரண வேலைத்திட்டங்கள் ஆகியன அடங்கும். இவை அனைத்தும் சராசரியாக ஒரே அளவு கால இடைவெளியைக் கொண்டிருந்தன.

**13. எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை தொடர்பான வேலைத்திட்டங்களை/நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்கும்போது அவற்றின் முக்கிய இலக்காக இல்லாதபோதும் பெண்கள் அல்லது பெண்பிள்ளைகளுக்கு உதவுவதுஃ உதவி வழங்குவதில் ஈடுபட்டதுண்டா?**





பதிலளித்தவர்களில் 43 சதவீதமானோர் எதிர்பாராத அல்லது திடீர் வன்முறையின் போது பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு தாம் எப்போதும் ஆதரவளிப்பதாகக் கூறியுள்ளனர். மேலும் 38மூஆனோர் சில சமயங்களில் அவ்வாறு செய்ய நேர்வதாகக் கூறியுள்ளனர். பதிலளித்தவர்களில் பத்தொன்பது சதவீதம் பேர், அவ்வாறான வேலைத்திட்டங்கள்ஃநிகழ்ச்சித்திட்டங்களின் போது பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு உதவுவதில்ஃ உதவி வழங்குவதில் ஒருபோதும் ஈடுபட்டதில்லை என்று கூறியுள்ளனர்.

**13.1 வரைபு 13 இல் உள்ள பதில்களுடன் ஒப்பிடப்பட்ட வரைபு 12இன் (எதிர்பாராத வன்முறை தொடர்பான சிக்கல்க□ளில் பணியாற்றுவதற்கு ஆம் அல்லது இல்லை என்று பதிலளித்தவர்கள்) தரவுகள்**




எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் பணியாற்றியமை தொடர்பில் ஆம் என பதிலளித்தவர்களில் 48 ஊளுழுக்கள், பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தமது வேலைத்திட்டத்தின் பிரதான இலக்குக் குழுவாக இல்லாவிட்டாலும்கூட எதிர்பாராத வன்முறைக்கு எதிர்வினையாற்றும்போது தாம் எப்போதுமே பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு உதவுவதாக அல்லது உதவிகள் வழங்குவதாக என்று பதிலளித்தனர்.

**14. வேலைத்திட்டங்களை/நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்கும்போது பின்வருவனவற்றில் எவை எப்போதும் கருத்திற் கொள்ளப்படுகின்றன அல்லது முன்னுரிமை அளிக்கப்படுகின்றன?**




பதிலளிப்புகளின்படி, பெரும்பாலானவையான 107 அமைப்புகள் தமது வேலைத்திட்டங்களை வடிவமைக்கும்போது பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளது தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளன. அடுத்ததாக மிகவும் முன்னுரிமை அளிக்கப்பட்ட பரப்பு மாற்றுத்திறனாளிகளது தேவைகள் ஆகும்.

# பண்புசார் தரவுப் பகுப்பாய்வு

## மட்டக்களப்பில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள்

மேலும் தகவல் அறிவதற்கு அல்லது தெளிவு பெறுவதற்கு கருத்துக்கணிப்பில் உள்ள சில வினாக்களுக்கு பின்தொடர் வினாக்கள் அவசியமாகும். மட்டக்களப்பில் உள்ள பல அமைப்புகளை எங்களால் நேர்காணல் செய்ய முடிந்தது. அத்துடன் கணக்கெடுப்பின் பரப்புகளை இன்னும் விரிவாக ஆராய முடிந்தது. நேர்காணல் பின்வர விடயங்கள் தொடர்பில் ஆய்வு செய்தது:

- ☐ பொதுவான அறிமுகம் மற்றும் CSOக்களின் நோக்கப் பரப்புகள்.
- ☐ இந்த CSOக்களின் வேலைத்திட்டங்களின் தன்மை
- ☐ பெண்கள், பிள்ளைகள், முதியவர்கள் மற்றும் டுபுடீவு சமூகத்தின் மீதான அவர்களது கவனம்
- ☐ எதிர்பாராத வன்முறை நிலைமைகளில் செயற்படும் போது CSOக்கள் எதிர்கொள்ளும் சவால்கள்
- ☐ CSOக்களின் செயற்பாடுகள் சார்ந்த அரச தலையீடு்.ஆதரவு

இதில் குறிப்பிடத்தக்க விடயமாவது, நாம் நேர்காணல் செய்த பெரும்பாலான ஊளுழுக்கள் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகளில் வெவ்வேறு வழிகளில் செயல்படுவதாக குறிப்பிட்டமை ஆகும். இவற்றுள் குடும்ப வன்முறை, பாலியல்ரீதியான துன்புறுத்தல், வறுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்டப்பூர்வமாக உதவுதல், பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இயங்க முடியாத அல்லது முறையான கல்வியைப் பெற முடியாதவர்களுக்கு உதவுதல் மற்றும் சமூகப் பணிகள் மற்றும் அரசியல் பிரச்சாரங்களில் தீவிரமாக ஈடுபடும் பெண்களுக்கு உதவுதல் போன்ற பணிகள் உள்ளடங்கும்.

ஒரு ஊளுழு குறிப்பாக முஸ்லீம் பெண்கள் மீது அவர்கள் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் மனைவிகள், தாய்மார்கள் மற்றும் ஆஆனுயுஇனால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோடுடன் அவர்கள் பணி ஆற்றுகிறார்கள். இது தவிர, சில ஊளுழுக்கள் சமூக நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் பணியாற்றுகின்றன. அவை மதங்களுக்கு இடையிலான உரையாடல்களுக்கும் நிகழ்வுகளுக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

கிட்டத்தட்ட அனைத்து ஊளுழுக்களும் டுபுடீவு சமூகத்துடன் தொடர்பைப் பேணுகின்றன. அவை டுபுடீவு சமூகத்தை தமது கலந்துரையாடல்களுக்கு அழைக்கின்றன. ஆண்டு தோறும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் களப்புக் கரையோரத்தில் மட்டக்களப்பு அமைந்திருப்பதால் சில ஊளுழுக்கள் குறிப்பாக அனர்த்த நிவாரணத்தில் கவனம் செலுத்துகின்றன. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது அவை அனைத்துமே நிவாரண நடவடிக்கைகளில் (அமைப்புகளாகவோ அல்லது தனிப்பட்ட உறுப்பினர்களாகவோ) ஈடுபட்டதாக நேர்காணலில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

நேர்காணலில் பங்குபற்றிய வெவ்வேறு ஊளுழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய நபர்கள் தமது நிறுவனத் திறனில் பணியாற்றுவது மட்டுமல்லாமல், அவ்வந்த ஊளுழுக்களில் இருந்து தாம் மேம்படுத்திக்கொண்ட நிபுணத்துவம் மற்றும் வலைப்பின்னல் மூலமாக தன்னார்வ சேவைகளை வழங்குவதாகக் கூறியமை குறிப்பிடத்தக்கது. தாம் சார்ந்த ஊளுழுக்களும் அவற்றின் நெறிமுறைகள் மற்றும் செயற்பாடுகளுடன் முரண்படாத வரை தமது தன்னார்வப் பணிகளை வரவேற்று ஆதரிக்கின்றன எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஓர் அமைப்பு தாம் ஆலோசனை வழங்குதல் போன்ற தன்னார்வப் பணிகளைச் செய்வதாகக் கூறியது: ஒரு பெண் காதி நீதிமன்றத்தில் சங்கடத்துக்குள்ளாகினால் அந்தப் பெண்ணுடன் தோளோடு தோள் நின்று தேவைப்படும் போதெல்லாம் ஆலோசனைச் சேவைகளை வழங்குகிறோம். மற்றொரு அமைப்பைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி அவர்கள் தன்னார்வப் பணியை எப்படிச் செய்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணத்தைக் குறிப்பிட்டார்: ஓர் அனர்த்தம் நடந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். எமது அமைப்புகளில் ஒன்றினால் வழங்கப்படும் ஓர் இடத்தில் நாம் ஒன்றுகூடி, உடனடியாக ஆற்ற வேண்டிய எதிர்வினைகள் பற்றி கலந்துரையாடுவோம். பின்னர் அப்பணியை நமக்குள்ளேயே பிரித்து பணியாற்ற் ஆரம்பிப்போம். அனர்த்த எதிர்வினைகளில், யாராவது எமளு

க்கு நிதி வழங்கும் வரை நாம் காத்திருக்க மாட்டோம். உதாரணமாக, கனமழை பெய்து அருகில் உள்ள ஒரு கிராமம் வெள்ளத்தில் மூழ்கினால், நாமே முன்வந்து அந்த கிராமத்தின் செல்வந்தர்களிடம் நிதி திரட்டி பொருள்களை வாங்கி விநியோகம் செய்வோம். அவ்வாறு செய்யுமாறு எங்கள் அமைப்புகள் அறிவுறுத்தும் வரை நாங்கள் காத்திருக்க மாட்டோம்.

அண்மைய நிகழ்வுகளை முன்வைத்து ஓர் அமைப்பு 2022 இல் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காலத்திலும் எரிபொருள் தட்டுப்பாட்டின் போது தாம் சமூகத்திற்கு உதவிய முறையை ஓர் உதாரணமாகக் குறிப்பிட்டது. பொருளாதார நெருக்கடிக்கான எதிர்வினையாக நாம் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கைப்பிடி அரிசியை சேகரித்து கஞ்சி தயாரித்து கிராமத்தவர்களு கஞ்சியை பகிர்ந்து வழங்கினோம். அத்துடன் அயல் கிராமங்களுக்கும் கஞ்சியைப் பகிர்ந்தளிக்க முடிந்தது. மக்களுக்கு அரிசியாகத் தர முடியாவிட்டால், அவர்கள் தமது வீட்டுக் கொல்லைப்புறத்தில் விளைந்த காய்கறிகளை எங்களுக்குத் தந்தாகள்.

பொருளாதார நெருக்கடியின்போது பெண்களுக்கு அவர்கள் எவ்வாறு உதவினார்கள் என்பதைப் பற்றி குறிப்பாகப் பேசுகையில் ஒரு பிரதிநிதி இவ்வாறு கூறினார்: பொருளாதார நெருக்கடியின் போது, ஆண்ளுக்குக் கிடைப்பதைப் போலவே பெண்களுக்கும் எரிபொருள் கிடைப்பதை நாங்கள் உறுதி செய்தோம். எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் பெண்கள் துன்புறுத்தப்பட்ட சம்பவங்களும் அவர்களுக்கு எரிபொருள் மறுக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. நாம் உடனடியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், பொலிசார், பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் உள்ளிட்டோரது பங்கேற்புடன் ஒரு கூட்டத்தை நடத்தி பெண்களுக்கு தனி வரிசையைக் கோரினோம். ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் ஒரு பெண் பொலிஸ் அதிகாரியை நியமிக்குமாறும் கேட்டுக் கொண்டோம். எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அதிகமான பெண்கள் இல்லாமல் பெரும்பாலும் ஆண்கள் உள்ள சந்தர்ப்பங்களில் இரண்டு ஆண்களுக்கு முன் ஒரு பெண் இருக்கும் வகையில் வரிசையை ஏற்பாடு செய்யுமாறு கோரினோம். மேலும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுடன் வரும் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு பொலிசார் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுத்தோம்.

மற்றொரு அமைப்பு உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின் போது அவர்கள் எவ்வாறு சம்பவங்களை வழிநடத்தினார்கள் என்பதைக் கூறியது: காடையர்களின் தாக்குதல்களுக்கு ஆளாகக்கூடிய நகரத்தில் உள்ள முஸ்லிம் கடைகள் பாதுகாக்கப்படுவதை நாங்கள் உறுதி செய்தோம். ஏனெனில் தாக்குதல் நடந்தவுடனேயே முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்கும் இடையே பதற்றமான நிலைமை ஏற்பட்டது. தெருச் சண்டைகளும் தகராறுகளும் நடந்தன. இந்த சூழ்நிலை குறித்து நாம் கலந்தாலோசித்தோம். எமது கூட்டங்களுக்கு கிறிஸ்தவ மத குருக்களை வரவேற்றோம். சில கூட்டங்கள் தேவாலயங்களிலும் நடந்தன. அருட்தந்தையர் முன்னணிக்கு வந்தனர். அவர்கள் பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அது சக்திவாய்ந்ததாக இருந்தது. பல முஸ்லிம் மக்களும் எமக்கு உதவத் தயாராக இருந்தனர். ஆனால் அவர்கள் தமது பாதுகாப்பு குறித்து அஞ்சினர். அந்த நேரத்தில் பல இஸ்லாமியர்கள் இரத்த தானம் செய்ய விரும்பினர். ஆனால் பின்விளைவுகள் குறித்த அச்சம் காரணமாக வெளியே வரவே தயங்கினர். எனவே, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு பொலிசார் மற்றும் மதகுரிமாரிடம் கோரிக்கை விடுத்தோம். அவர்கள் மருத்துவமனைக்கு வந்து ரத்த தானம் செய்ய பொலிசார் பாதுகாப்பு அளித்தனர்.

இந்த தலையீடுகளின் வாயிலாக ஊஆமுக்களின் உறுப்பினர்கள் பொதுவான நோக்கங்களுக்காக தாமாகவே செயற்பட சுதந்திரம் கொண்டவர்களாக இருப்பதையும், அவர்கள் தம்மை ஒருங்கிணைக்க ஓர் பொறிமுறையை உருவாக்கியுள்ளனர் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது. இந்த உறுப்பினர்கள் பல்வேறு நோக்கங்களுக்காக ஒரு குடையின் கீழ் இணைந்துள்ளனர் மேலும் அவர்கள் ஒவ்வொரு உறுப்பினர் மற்றும் ஊஆமுக்களின் இயலுமைகளைப் பற்றி நன்கு அறிந்தவர்களாக உள்ளனர். இது திடீர் நிலைமைகளுக்கு எதிர்வினையாற்றுகையில் தமக்குள் விரைவாக ஒருங்கிணைப்பு செய்வற்கு அவர்களுக்கு உதவியது.

பெண்கள் தொடர்பான விவகாரங்களில் கவனம் செலுத்துவதற்கு மேலதிகமாக முதியவர்கள் மற்றும் டுபுடீவு சமூகம் தொடர்பான பிரச்சனைகளிலும் ஊஆமுக்கள் இணைந்து செயற்படுகின்றன. நேர்காணலுக்கு வந்தவர்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும், குறிப்பாக விளிம்புநிலைச் சமூகங்களை தமது வேலைதிட்டங்களுக்குள் சேர்த்து ஒரு சிறந்த முடிவை உருவாக்குவது முக்கியம் என்று கருத்து தெரிவித்தனர். குறிப்பாக விளிம்புநிலைச் சமூகங்களான பெண்கள், பெண்பிள்ளைகள், முதியவர்கள் மற்றும் டுபுடீவு சமூகங்கள்

மீது கவனம் செலுத்துவது அவர்களது அமைப்புகளுக்கு மேலதிக வேலைத்திட்டங்களைக் கண்டறிவதற்கு உதவுகிறது எனவும் அவர்கள் கூறினர்.

அதேவேளை சரியான மதிப்பீடு இல்லாமல் சமூகத்தின் சில பிரிவினருக்கு முன்னுரிமை அளிப்பது எவ்வாறு சில பிரிவினரை ஒதுக்கிவிடும் என்பது தொடர்பிலும் ஒரு அமைப்பு பேசியது. அவர்கள் விரிவாக கூறிய-தாவது, பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது முதியவர்கள் மிகவும் அவதிக்குள்ளாயி-னர். அவர்களுக்கான விசேட மாதாந்தக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன. அவர்கள் எம்மை அணுகவும் வழி இருக்கவில்லை. நாம் அவர்களை அணுக முயற்சி செய்து தேவையான பொருள்களை வழங்கினோம். மேலும், உலர் உணவுப் பொருள்கள் விநியோகத்தின் போது முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு மாவட்ட செயலக அதிகாரிகள் எமக்கு அறிவுறுத்தினர். எனவே, சிறுவர்கள் அந்த நிவாரணங்க-ளில் உள்ளடக்கப்படவில்லை.

முஸ்லிம் பெண்களைப் பற்றி பேசுகையில், ஒரு ஊளுழு இவ்வாறு தெரிவித்தது: பராமரிப்பு கோரும் பெண்கள் பொருளாதார நெருக்கடியின் போது பல சிக்கல்களை எதிர்கொண்டனர். பொருளாதார நெருக்கடியின் போது தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதாகக் கூறி ஆண்கள் தப்பித்துக்கொண்டனர். கிராமசேவகர் மற்றும் கிராம-த்தைச் சேர்ந்த செல்வாக்கு மிக்கவர்களின் உதவியின் மூலம் சில பெண்கள் தமது பராமரிப்புது தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் உதவினோம். சில ஆண்கள் காதி நீதிமன்ற உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து உரிய தொகையை வழங்கினர்.

நெருக்கடி காலகட்டங்களில் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஆதரவு வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு செல்வா-க்கைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுவதால் இது குறிப்பிடத்தக்கதாகிறது. சிறந்த அரச பொறிமுறைகள் மற்றும் உதவி செய்வதற்கான உண்மையான விருப்பம் ஆகியவை பொலிசார் மற்றும் உள்ளூராட்சி மன்றம் போன்ற அரசாங்க அதிகாரங்களில் காணப்படுதல் வேண்டும்.

மற்றொரு அமைப்பு விசேட தேவையுடையோரைப் பற்றிக் கூறியது: இன்றைய காலப்பகுதியில் விசேட தேவை-வயுடையோர் மிகவும் க்'டப்படுகிறார்கள். சுகாதார சீர்கேடு நிலவி வருவதால், மருந்துகளைப் பெற முடியாமல் சிரமப்படுகின்றனர். செயற்கை உடல் உறுப்புகள் பொருத்திக்கொண்டவர்களுக்கு தொடர்ச்சியான பராமரிப்பு அவசியம். மருத்துவமனைகளில் அது முறையாக வழங்கப்படுவதில்லை. இதன் விளைவாக, அவர்கள் கா-யங்களுக்கும் மற்றும் தொற்றுநோய்களுக்கும் உள்ளாகின்றனர்.

மேலும் ஏனைய நோய் நிலைமைகளைக் கொண்டவர்கள் இந்த நாட்களில் விசேட தேவையுடையவர்களாக மாறுகின்றனர். உதாரணமாக, நீரிழிவு நோயாளிகள் முறையான மருந்துகள் இல்லாமல் பார்வைக் குறைபாட்டி-னால் பாதிக்கப்படுகின்றனர். நாம் இங்கும் சில சம்பவங்களைப் பார்த்திருக்கிறோம். மற்ற பங்கேற்பாளர்கள் அனைவரும் பொருளாதார நெருக்கடி உருவாகும்போது இது அதிகரித்துச்செல்லும் ஒரு பிரச்சினை என ஒப்பு-க்கொண்டனர்.

டுபுடீவு சமூகத்தைப் பொறுத்தவரை டுபுடீவு மக்கள் இப்போது மிகவும் சுறுசுறுப்பாக உள்ளனர். அவர்கள் ஒரு குழுவாக செயற்படுகின்றனர். சமூகம் இன்னும் அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், எமது அமைப்புகள் அவர்களுக்கு மிகவும் ஆதரவாக இருக்கின்றன. அவர்களது குழு இன்னும் இங்கு பதிவு செய்யப்படவில்லை. ஆனால் அவர்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டவர்களாக உள்ளனர். எமது கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் பயிலரங்குகளுக்கு அவர்களை நாம் அழைக்கிறோம். டுபுடீவு இளைஞர்கள் எமது பயிலரங்குகளில் பங்கேற்கின்றனர். அவர்களுடைய கூட்டங்களுக்கு எம்மையும் அழைக்கின்றனர். நாம் சேர்ந்து தெரு நாடகம் போடுகிறோம். நாமும் அவர்களுக்கு தனிப்பட்ட முறைகளிலும் உதவி செய்கிறோம். மட்டக்களப்பைச் சுற்றி ஒரு பாலினத் தம்பதியரின் பெற்றோர் அவர்களது உறவை ஏற்றுக்கொள்ளாத சில சம்பவங்கள் நடந்துள்ளன. நாம் குடும்பத்தினருடன் பேசி அந்த தம்பதியர் பாதுகாப்பான சூழலில் வாழ்வதை உறுதிசெய்கிறோம். எனக் குறிப்பிடப்பட்டது.

அதிகமான டுபுடீவு சமூகங்களை அணுகுவதில் நாம் சிரமப்படுவதற்குக் காரணம் இந்த குழுக்களில் பல முறைசாரா குழுக்களாகவும் பதிவு செய்யப்படாதவையாகவும் இருப்பதனால் ஆகும். ஒரு முறையான அமை-ப்பாக பதிவு செய்தால் இந்த நிறுவனங்கள் நிதி மற்றும் ஏனைய உதவிகளை அணுக முடியும். இருப்பினும் இதன்மூலமாக ஏற்படும் ஆபத்துகள் குறித்தும் நாம் அறிவோம்.

ஊளுழுக்கள் சமூகம் மற்றும் அரசு ஆகிய இரண்டிலிருந்தும் பல சவால்களை எதிர்கொள்கின்றன. இலக்குக் குழுக்களும் ஊளுழுக்களுக்கு விரோதமாக இருந்தன. உதாரணமாக, ஆஆனுயு தொடர்பான அவர்களின் பிரச்சாரத்தை அனைத்து முஸ்லிம் பெண்களும் வரவேற்கவில்லை என்று ஒரு ஊளுழு கூறியது.

இது சமூகத்திற்கு தேவையில்லை எனக்கூறி அவர்கள் இதனை எதிர்த்தனர். எனவே, அவர்கள் எமது பயிலரங்குகளில் பங்கேற்பதைத் தவிர்த்ததோடு ஏனையவர்களையும் பங்கேற்க வேண்டாம் என்று வற்புறுத்தினர். இருப்பினும், காலப்போக்கில் நிலைமை மாறிவிட்டது.

நேர்காணல் செய்யப்பட்டவர்களில் ஒருவர் கூறியதாவது: பொதுவாக, சமூகங்கள் முன்பு விரோதமாக இருந்தன. அவர்கள் எங்களை வெளிநாட்டுக் காசுக்காக வேலை செய்பவர்களாகப் பார்த்து எங்களை எதிர்த்தனர். ஆஆனுயு பிரச்சாரத்தின் போது, இது எங்கள் மீது சுமத்தப்பட்ட முக்கிய குற்றச்சாட்டு. ஆனால் இப்போது ஒரு வித்தியாசத்தைக் காண்கிறோம். நாம் ஏற்படுத்திய உண்மையான தாக்கத்தை மக்கள் கண்டுகொள்வதால் எங்களை வரவேற்கிறார்கள். முஸ்லிம் ஆண்கள் கூட இப்போது எங்கள் ஆஆனுயு பிரச்சாரங்களுக்கு ஆதரவாக உள்ளனர். அந்த அளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

அரசாங்கத்தின் தடங்கல் குறித்து, ஒரு ஊளுழு பகிர்ந்து கொண்டதாவது: முன்பு, அரச அதிகாரிகள் எமது பணியை ஆதரிக்கவில்லை. அவர்கள் எமது பின்னணி குறித்து சந்தேகம் கொண்டவர்களாக இருந்தனர். ஆனால் இப்போது அவர்கள் எம்முடன் மிகவும் நட்பாக இருக்கிறார்கள். எம்முடன் பிரச்சினைகளை வெளிப்படையாக பேசுகிறார்கள். நாம் எமது வேலைத்திட்டங்களை செயற்படுத்தும்போது அவர்கள் தமது கவலைகளை வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் எம்மை மாதாந்தக் கூட்டங்களுக்கும் அழைக்கிறார்கள்.

உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளுடனான உறவைப் பற்றிக் குறிப்பிட்ட ஒரு ஊளுழு அவர்கள் உள்ளூர் அரசாங்கத்துடன் எவ்வாறு வேலை செய்கிறார்கள் என்பதை விவரித்தபோது பிரதேச செயலகங்கள் பதிவுசெய்யப்பட்ட பேழுக்களை ஆண்டின் தொடக்கத்தில் வருடாந்த கூட்டத்திற்கு அழைக்கின்றன. இந்தக் கூட்டத்தில் எமது பணி பற்றிய எண்ணக்ககருக் குறிப்பைச் சமர்ப்பிக்கச் சொல்கின்றனர். இப்போதெல்லாம், கையில் போதுமான நிதி மற்றும் வேலைத்திட்டங்களை வைத்திருக்கும் பேழுக்கள் மட்டுமே அழைக்கப்படுகின்றன (எனவே, அவர்கள் எண்ணக்ககருக் குறிப்புகளை சமர்ப்பிக்கலாம்). தன்னார்வத்துடன் பணியாற்றத் தயாராக இருந்தும் கவர்ச்சிகரமான மற்றும் தேவையான வேலைத்திட்டங்களைக் கொண்டிருந்தாலும், ஆண்டுக்கான நிதியைப் பெறாத பேழுக்கள் அழைக்கப்படுவதில்லை. மேலும், பதிவு செய்யப்படாத வலைப்பின்னல்களும் அழைக்கப்படுவதில்லை. இது பாதகமான, உள்ளீர்ப்பு அற்ற பாரபட்சமான ஒரு நடைமுறை என நாம் அனைவரும் நினைக்கிறோம்.

மற்றொருவர் தெரிவித்த கருத்தாவது: பெரும்பாலும், எண்ணக்கருக்குறிப்புகளை அனுப்பும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எண்ணக்கருக் குறிப்புகளுக்கு அப்பாற்பட்ட பணியைச் செய்கின்றன. அவை பிரதேச செயலகங்களுக்கு அடிப்படை கட்டமைப்பை வழங்குகின்றன. சில நேரங்களில் பிரதேச செயலகங்கள் எமது செயற்பாடுகள் குறித்து நாம் எண்ணக்கருக்குறிப்பிற்கு அப்பால் சென்று பணி புரிவதாக நம்மைக் கேள்வி கேட்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறான நிலைமைகள் நம்மை ஊக்கமிழக்கச்செய்யும். மேலும், எதிர்பாராத சிக்கலான நிலைமைகளிலும் பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கும் எம்மைப் பொறுத்தவரை ஒரு எண்ணக்கருக்குறிப்பை அனுப்புவது சாத்தியமற்றது. இவ்வாறாக எண்ணக்கருக்குறிப்புகள் எம்மைக் கட்டுப்படுத்துகின்றன. எனவே, சில அமைப்புகள் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு எண்ணக்கருக் குறிப்புகளை அனுப்பாமல் தாமாகவே பணியாற்றுகின்றன. இது தன்னார்வ தொண்டு நிறுவனங்களை வலையமைப்புகளில் இருந்து அந்நியப்படுத்துகிறது.

அரசாங்க அதிகாரிகள் ஊளுழுக்களிடமிருந்து பெறும் எண்ணக்கருக்குறிப்புகளின் அடிப்படையில் தமது நடவடிக்கைகளைத் திட்டமிடுகின்றனர். ஊளுழுக்களின் செயற்பாடுகளை அரசாங்கம் முழுமையாகச் சார்ந்திருக்கவில்லை என்றாலும், ஊளுழுக்களின் வேலைத்திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்து அதற்கேற்ப தமது வேலைத்திட்டங்களைத் திட்டமிடுவதில் அரச துறைக்கு அனுகூலங்கள் உள்ளன.

ஊளுழுக்கள் இலக்கு வைத்துள்ள அதே பரப்புகளுக்காக நிதி ஒதுக்குவதை விட வெவ்வேறு நோக்கங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்வதும் இதில் உள்ளடங்கும். அரச துறை அதிகாரிகள், ஊளுழுக்களிடமிருந்து எண்ணக்கருக் குறிப்புகளைப் பெற்றதன் பின்னர் குடிமக்களுக்கான வேலைத்திட்டங்களைத் திட்டமிடுவதில்லை.

மாறாக, அவர்கள் ஒழுங்கற்ற நிதியிடலைத் தவிர்ப்பதற்காக ஊளுழுக்களின் திட்டங்களுக்கு ஏற்ப தமது செயல்பாடுகளை புதுப்பிக்கிறார்கள் எனக் கருதுவது பாதுகாப்பானது.

பதிலளித்தவர்களில் ஒருவர் பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள அரச அதிகாரிகளைப் பற்றி இவ்வாறு கூறினார்: எங்களுக்கு அவர்களது ஒப்புதல் தேவை. அவர்கள் எங்களது வேலையைச் செய்வதை நாங்கள் விரும்பவில்லை, ஆனால் அவர்களது வேலையை நாங்கள் செய்ய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் ஐகுபுனு இல் உள்ள ஏனையோதர் ஒப்புக்கொண்டனர்ஸ. இப்போதெல்லாம், அவர்கள் கூட்டங்களில் எங்களது அமைப்புகளைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். அத்துடன் எங்கள் வேலையையும் அங்கீகரிக்கிறார்கள்.

மக்கள் தமது பிரச்சினைகளை அவர்களிடம் கொண்டுவரும்போது, அதை நிவர்த்தி செய்வதற்கு அவர்கள் எங்களை பரிந்துரைக்கிறார்கள். சில சமயங்களில், தம்மிடம் பிரச்சினைகளுடன் வரும் நபர்களைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறுவதற்காக அவர்கள் எம்மை அணுகுகிறார்கள். ஏனெனில் பெரும்பாலும் பேழுக்கள் ஒவ்வொரு சம்பவத்தையும் தனித்தனியாக அணுகுகின்றன. மேலும் எங்கள் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தனித்தனி சம்பவக்கோப்புகள் உள்ளன.

அரச அதிகாரிகள் சில நேரங்களில் குறிப்பிட்ட தகவல்களை எங்களிடம் கேட்பார்கள். மேலும், அடிக்கடி இடமாற்றம் பெறுபவர்களைப் போலல்லாது நாம் நீண்டகால செயற்பாட்டாளர்களாகவும் பணியாளர்களாகவும் இருப்பதால் அவர்களை எம்மில் தங்கியிருக்கிறார்கள். இரட்டை எண்ணல்கள் மற்றும் பிரதியிடல்களை கொண்டிருக்க வேண்டாம் என நாம் அவர்களிடம் கேட்டுக் கொண்டோம்.

இந்த நேர்காணல் செய்யப்பட்டவர் நிலமட்ட அளவில் பணிபுரியும் ஊளுழுக்களின் நிபுணத்துவத்தை அரச அதிகாரிகள் ஏன் நம்பியிருக்க வேண்டும் என்பதற்கான முக்கியமான கருத்தை எழுப்புகிறார். மேலும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளின் இடமாற்றங்கள் பிரதேச செயலகத்தின் சுமுகமான செயற்பாட்டை எவ்வாறு பாதிக்கின்றன என்பது குறித்தும் மற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் தங்கியிருப்பதற்கு எவ்வாறு வழிவகுத்தது என்பது குறித்தும் இந்த நேர்காணல் செய்யப்படுபவர் குறிப்பிடுகிறார்.

ஒரு ஊளுழு கூறியதாவது, ஒரு இடமாற்றம் நடைபெற்று ஒரு புதிய நபர் நியமிக்கப்படும்போது, பேழுக்களாகிய நாம் குழுக்களாக அவர்களை சந்தித்து எம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறோம். இடமாற்றங்கள் அடிக்கடி நிகழாவிட்டாலும் அவை நிகழும்போது நாம் எமது செயன்முறையை மீண்டும் தொடங்க வேண்டும். நாம் எமது பணியை விளக்குவதோடு அவர்களிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்கிறோம் என்பதை விளக்குவோம். இது எமக்கு கடினமாக உள்ளது. ஏனெனில், நாம் ஒரு அரச அதிகாரியைப் பயிற்றுவிப்பது போன்று நாம் இங்கு எப்படி பணியாற்றுகிறோம் செய்கிறார்கள் என்பதை நன்கு அறிந்த பின்னர் அவர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்கள். பின்னர் அதே செயன்முறையை நாம் மீண்டும் செய்ய வேண்டும்.

பயிற்சியைப் பொறுத்தவரை, அரச அதிகாரிகளுக்கு அவர்கள் எவ்வாறான பயிற்சியை அளிக்கிறார்கள் என்பதை விரிவாகக் கூறுமாறு அவர்களிடம் கேட்டோம். அத்தகைய பயிற்சியில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை, சிறுவர் உரிமைகள், அறிக்கையிடல் மற்றும் முன்மொழிவு எழுதுதல் போன்ற எண்ணக்கருக்கள் பற்றிய அறிமுகம் அடங்கும் என்றனர். அரச அதிகாரிகள் ஊளுழுக்களிடம் பயிற்சி பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயம் ஆகும்.

நேர்காணலில் பங்கேற்ற மற்றொருவர் கூறியதாவது: "பெண்களின் அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் ஏனைய ஊழியர்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும், மேலும் அவற்றை மேலதிக பிரதேச செயலகத்துக்கு தெரிவிக்க வேண்டும். இந்த அதிகாரிகளில் பெரும்பாலானவர்கள் எம்மையே நம்பியுள்ளனர்..்.அந்த வேலைத்திட்டங்களைப் பற்றிய குறித்துரைக்கப்பட்ட விவரங்களையும் முன்னேற்றங்களையும் அவர்கள் எம்மிடம் கேட்பார்கள் (சில வேலைத்திட்டங்கள் பேழுக்களின் நிதியுதவியால் மேற்கொள்ளப்படுவதோடு அரச அதிகாரிகளால் கண்காணிக்கப்படுகின்றன). அவர்கள் எங்களை அழைத்து தகவல்களையும் முன்னேற்ற அறிக்கைகளையும் பற்றி கேட்கிறார்கள். அவர்கள் உயரதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யும்போது அவர்கள் எம்மை நம்பியிருக்கிறார்கள்.

இன்னொரு ஒரு ஊளுழு கூறியதாவது: பிரதேச செயலகத்தில் "மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்கள்" (ஒருங்கிணைப்பு கூட்டம்) என்று அழைக்கப்படும் வழமையான கூட்டங்கள் நடைபெறும். இப்பிரதேசத்தில் உள்ள அனைத்து அரசாங்க அதிகாரிகளும் அதற்கு அழைக்கப்பட்டாலும் நாம் அதற்கு அழைக்கப்படுவதில்லை. நாம் அதைப் பற்றி கேட்டோம். அப்போது இந்த கூட்டத்திற்கு பேழுக்களை அழைப்பதற்கான ஏற்பாடுகள் தமது சுற்றறிக்கையில் இல்லை என அவர்கள் கூறினர். நாம் கூட்டத்திற்கு அழைக்கப்படுவோமாக இருந்தால் எல்லா திணைக்களங்களினதும் அனைத்து அதிகாரிகளையும் நாம் சந்திப்போம் அவர்களுடன் இந்த அனைத்து பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடலாம். கூட்டம் தங்கள் நிகழ்ச்சிநிரலை மீறி செல்லாதிருப்பதை உறுதி செய்வதற்காகவே அவர்கள் எம்மை அழைக்கவில்லை.

இதைத் தொடர்ந்து, பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சு, கல்வி அமைச்சு அல்லது சுகாதார அமைச்சு போன்ற அமைச்சுகள் ஊளுழுக்களின் நோக்கம் மற்றும் நடவடிக்கைகளை ஆதரிக்கின்றனவா என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. நேர்காணலில் பங்கேற்றோர் அதனை மாகாண அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகள் என அர்த்தப்படுத்திக்கொண்டனர்.

நேர்காணலில் பங்கேற்ற ஒருவர் கூறிய பதிலாவது, இங்கே ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களால் எந்தப் பயனும் இல்லை. அவர்கள் கவனம் பெறுவதற்கான தேவை உள்ளபோது மட்டுமே அவர்கள் வருகிறார்கள். அவர்கள் எமது பணிக்கு ஆதரவளிக்கவில்லை. கொழும்பில் உள்ள அமைச்சுகளுடனான சந்திப்புகளில் (மத்திய அரசாங்கத்தின் அமைச்சுளுடனான) நமது பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதை அவர்களால் எளிதாகச் செய்யமுடியும். ஆனால் எம்து உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள் உதவிகரமாக இல்லை. இதன்மூலம் அரசாங்க அதிகார மட்டத்திலான பதவிகள் ஊளுழுக்களுன் வேலை செய்வதற்கு எந்த அளவுக்குத் தயாராக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளை விட உள்ளூர் விவகாரங்களுடன் நெருக்கமானவர்களாகவும் இணைக்கப்பட்டுள்ளவர்களாகவும் இருக்கும் மாகாண அதிகாரிகளுடன் பணியாற்றுவது இது மிகவும் இலகுவானதாக இருக்கும். மாகாண அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கும் ஊளுழுகளுக்கும் இடையேயான தொடர்பின் சுணக்கங்கள் தொடர்பாடல் இடைவெளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை ஊளுழுக்களுடன் இணைப்பதற்கு ஒரு பொறிமுறை இருந்தால், அது ஊளுழுக்கள் சமூகங்களிடையே விளைதிறனுடன் பணியாற்றுவதற்கு ஒரு தூண்டுதலாக அமையும்.

வேலைத்திட்டங்களில் வளங்கள் பயன்படுத்தப்படும் முறை பற்றோ நேர்காணலில் பங்குபற்றியோரிடம் கேட்கப்பட்டன. கேள்விகள் ஊளுழுக்கள் மற்றும் அரசாங்கத்தின் வளங்களை பிரிப்பதில் கவனம் செலுத்தின. ஊளுழுக்களுடன் வேலைதிட்டங்களை செயற்படுத்துவதில் அரசின் ஒருங்கிணைப்பு மற்றும் அவற்றில் குறிப்பிடத்தக்க அளவு சார்ந்திருத்தல் காரணமாக இந்த உண்மையை அடையாளம் காண வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

நேர்காணலில் பங்கேற்ற ஒருவர் கூறியதாவது: இது எப்போதும் தனித்தனியாகவே இருக்கும். அவர்கள் செலவுகளை உயர் அதிகாரிகளிடம் காட்ட வேண்டும். எனவே, அவர்கள் எங்களிடம் சான்றுகளைக் கேட்பதில்லை. நேர்காணலுக்கு வந்தவர்கள் பிரதேச சபைகளைப் பற்றி பேச விரும்பியதால், கலந்துரையாடல் வேறு பாதையில் சென்றது, அரசியல் கட்சிகள் பெரிதும் செல்வாக்கு செலுத்துவதால், அவர்கள் தமது சொந்த நலனுக்காக வளங்களை ஒதுக்குகிறார்கள். நாங்கள் (அந்த குறிப்பிட்ட ஊளுழு, ஒட்டுமொத்தக் குழுவும் அல்ல) எமது சம்பளத்தை எமது கட்சிக்குக் கொடுக்கிறோம். ஆனால் பிரதேச சபை வேறு விதமாக எம்மைச் சார்ந்துள்ளது. சில நேரங்களில் அவர்கள் பாதீடு மற்றும் நிதி அறிக்கைகளை உருவாக்க எமது உதவியை நாடுகிறார்கள்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி பற்றி நேர்காணலில் பங்கேற்ற ஒருவர் எம்முடன் பின்வரும் கருத்தை பகிர்ந்துகொண்டார்: நாம் தொழில்நுட்ப நிபுணர்களாகிவிட்டோம். நாங்கள் ணுழழஅ சந்திப்புகளை நடத்தினோம். எமது ஒருங்கிணைப்பு வலுவானது. உதாரணமாக, நான் எனது இல்லத்திலிருந்து தூரமான ஒரு பிரிவில் பணியாற்ற வேண்டியிருந்தால், அந்த வேலையைச் செய்ய ஐஅங்கே உள்ளஸ எம்மில் ஒருவரை தொடர்பு கொள்வேன். இது பொது மருத்துவமனைகளிலுள்ள புடீஏ மேசையில் நடக்கிறது. இது 2004 ஆம் ஆண்டு மனநல மருத்துவரான டாக்டர் ரனீசனால் ஆரம்பிக்கப்பட்டது. இது புடீஏ பிரச்சனைகளில் வேலை செய்ய சுகாதார ஊழியர்களிடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு வலையமைப்பு ஆகும். இது காத்தான்குடி, மண்முனை மற்றும் ஏறாவூர் பிரிவுகளில் செயற்படுகின்றது.
மேலதிக தகவலுக்கு மிதுரு பியச என்ற அரசாங்க நிகழ்ச்சித்திட்டத்தின் இணையதளத்தைப் பார்க்குமாறு நேர்காணல் செய்தவர் எங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

எதிர்கொள்ள நேர்கிற சவால்கள் குறித்துப் பேசும்போது ஏனையவர் மேலும் கூறியதாவது: போக்குவரத்தில் எங்களுக்கு சிக்கல்கள் இருந்தன. எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொதுப் போக்குவரத்து வசதியின்மை காரணமாக எங்களால் இடங்களுக்குச் செல்ல முடியவில்லை. நெருக்கடியின் போது, நெருக்கடியைக் கையாள இரண்டு நாட்களில் எண்ணக்கரு குறிப்புகளை மாற்றுமாறு மாவட்ட செயலகம் எம்மை அழைத்தது. பெரும்பாலான நன்கொடையாளர்கள் இது மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தம் எனக்கூறி எமது கோரிக்கைகளை நிராகரித்தனர்.

நேர்காணலில் பங்கேற்ற இன்னொருவர் தமக்கு வேலைத்திட்டத்தை மாற்றுவதற்கான தேவை இருந்தபோதிலும் தமது வேலைத்திட்டங்களை மாற்ற முடியாததைப் பற்றி பேசினார். மேலும் ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்ட வேலைத்திட்டங்களை அதே
போன்று முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, பயனாளர்களுக்கு கழிவறைகளை கட்டுவதற்கான சுத்திகரிப்பு வேலைத்திட்டத்திற்கான நிதியைப் பெற்றோம். உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் எண்ணக்கருக் குறிப்புகளை மாற்றுமாறு மாவட்ட செயலகம் எங்களிடம் கேட்டுக் கொண்டது, ஆனால் எமது பிரித்தானிய நன்கொடையாளர் எமது கோரிக்கையை நிராகரித்தார். அதனால், தட்டில் சாப்பாடு கிடைக்காத மக்களுக்கு கழிவறை வசதியை செய்து கொடுத்துள்ளோம்.

இறுதியாக இன்னுமொரு ஊளுழு கூறியதாவது, எங்களுக்கும் பணவீக்கத்தில் சிக்கல்கள் இருந்தன. அதற்கான நிதியும், வேலைத்திட்டத்தின் திட்டங்களையும் பெற்றுள்ளோம். எனினும் எங்களால் இலக்கை அடைய முடியவில்லை. விலைகள் உயர்ந்தன. எமது கைகள் கட்டப்பட்டுள்ளன. சம்பளம் ஏற்றப்படவில்லை ஆனால் விலை உயர்ந்தது. ஒரேயடியாக விட்டுப்போக முடியாததால் வேறு பணிகளுக்கு மாறவும் முடியவில்லை

## அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

பொதுவாக நாட்டின் ஒவ்வொரு மாவட்ட செயலகத்துக்கும் ஒரு பேுழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்படுவார். ஓர் ஒருங்கிணைப்பாளர் மாவட்ட அளவில் அரசு சாரா நிறுவனங்களின் தேசிய செயலகத்தை பிரதநிதித்துவப்படுத்துகிறார். மாவட்ட அளவிலான தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணிகளை கண்காணித்து, நாட்டின் வளர்ச்சிக்கு அவர்களது முழு ஆதரவையும் பெற வேண்டும். பேுழு சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவர்கள் தலைமை அலுவலகத்திடன் உதவியை நாட வேண்டும்.

அரசு சாரா நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பைப் புரிந்து கொள்ளும் நோக்கில் பல பிரதேச செயலகங்களை அணுகினோம். அதிக அளவில் மற்றும் குறைந்த அளவில் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைக் கொண்ட மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பிரதேச செயலகங்களை நாம் தேர்ந்தெடுத்தோம். மேலும் மாதிரிகள் தமிழ் மற்றும் சிங்களம் பேசும் பெரும்பான்மையினரிடமிருந்து எடுக்கப்பட்டன. மட்டக்களப்பு, புத்தளம்- வனாத்தவில்லுவ, பொலன்னறுவை மற்றும் அக்குறணை ஆகிய பிரதேசங்கள் எமது அழைப்புகளுக்குப் பதிலளித்து தாராளமாக அவர்களின் பணி தொடர்பான தகவல்களைத் வழங்கின.

முதலில் நாம் மட்டக்களப்பு பிரதேச செயலகத்தை அணுகினோம். அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது நேரத்தை ஒதுக்கி எமது அழைப்புக்கு பதிலளித்து பயனுள்ள தகவல்களையும் வழங்கினர். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது வேலையை சிறப்பாக ஒழுங்கமைக்க உதவுவதற்காக, தங்கள் பிராந்தியத்தில் உள்ள பேுழுகளுடன் வழமையான தொடர்பைப் பேணுவதாகக் கூறினர். அனர்த்த முகாமைத்துவத்துக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனர்த்தம் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவது முதல் தமது பிரதேசங்களில் நிவாரணப் பணிகளை ஏற்பாடு செய்வது வரையான தமது முக்கிய செயற்பாடுகளை விவரித்தனர். அதேபோன்று அனர்த்த முகாமைத்துவத்துவத்தை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் எவ்வாறு ஒருங்கிணைக்கிறார்கள் என்பதையும் அவர்கள் விளக்கினர். அரசு சாரா நிறுவனங்களின் நிதிச் செலவுகள் குறித்தும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள கண்காணிப்பார்கள். பிரதேச செயலகங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்றால், நிதி உதவி பெறுவதன் மூலம் பொதுமக்களுக்கான முக்கியமான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதனூடாக அவை பேுழுக்களுடன் ஒருங்கிணைக்கின்றன. பேுழுக்கள் அத்தகைய பணிகள் தமது பணிப்பரப்புக்குள் வருவதை உறுதி செய்கின்றன.

பேுழுக்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு வருடத்தின் தொடக்கத்தில் ஒரு கூட்டத்தை நடத்துவதன் மூலம் திட்டமிடப்படுகிறது. பிரதேச செயலகங்களுக்கு மீண்டும் மீண்டும் குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க பேுழுக்களிடமிருந்து பெறப்படும் செயற்பாட்டுத் திட்டங்களும், அதற்கேற்ப திட்டமிடலும் தேவைப்படுகின்றன. பேுழுக்கள் தமது செயற்பாட்டுத் திட்டங்களை மாற்றினால், அவர்கள் அதனை உடனடியாக பிரதேச செயலகங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். பிரதேச செயலகங்கள் தமது அபிவிருத்தித் திட்டங்களையும் நிதியையும் ஒழுங்கமைத்துக்கொள்ள இது உதவும்.

எவ்வாறாயினும், பேழு செயற்பாடுகள் குறைவாக உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் பேழுக்களின் பணியை ஒருங்கிணைத்து உயரதிகாரிகளிடம் அறிக்கையிடுவதற்கு பிரத்தியேகமாக ஓர் அலுவலரை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றே தோன்றுகிறது. உதாரணமாக, புத்தளம் - வண்ணாத்திவில்லு பிரதேச செயலகத்தின் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தமது பிராந்தியத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைக்கிறார்கள். ஒரு பேழு பெண்கள் தொடர்பான திட்டத்துடன் பிரதேச செயலகத்தை அணுகினால், பெண்கள் வலுவூட்டல் கிளையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அந்த பேழு உடன் இணைக்கப்படுவர். பேழுக்களுக்கு இணைப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில் மாவட்ட செயலாளருடன் தொடர்பு கொண்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் பதவிக்கு ஒருவரை நியமிக்கலாம் எனவும் ஆயினும் தற்போது அந்த பதவி நிரப்பப்படாமல் உள்ளது எனவும் அக்குறணை பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

பொலன்னறுவை பிரதேசத்தில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கிராம அபிவிருத்தியில் கவனம் செலுத்தி வருவதால், கிராம சேவகர்களால் அங்கு பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்களின் விரிவான பட்டியல் பேணப்படுவதாக பொலன்னறுவை பிரதேச செயலகம் தெரிவிக்கிறது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பிரதேச செயலகங்கள் மேற்பார்வையாளரின் வகிபாகத்தை ஏற்கின்றன. பேழுக்கள் பயனாளர்கள் பற்றிய தரவுகள் மற்றும் அவர்களது வேலைதிட்டங்களுக்கு ஒப்புதல் ஆகியவற்றைப் பெற பிரதேச செயலகங்களை அணுகுகின்றன. தேவைப்படும் பட்சத்தில் பேழுக்களின் வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பிரதேச செயலகங்கள் மனிதவளத்தையும் வழங்குகின்றன. பேழுக்களின் அபிவிருத்தி, வேலைதிட்டங்களின் அமுலாக்கம் மற்றும் எழும் சிக்கல்கள் குறித்து மாதாந்திர அறிக்கைகள் பிரதேச செயலகங்களுக்கு அவசியமாகும்.

பொருளாதார நெருக்கடியின் போது, பிரதேச செயலகங்கள் உடனடி நெருக்கடிக்கு எதிர்வினையாற்றுவதற்கு பேழுக்களின் உதவியை நாடின. சில பேழுக்கள் நெருக்கடியை எதிர்கொள்ள நிதி அளித்தன. நெருக்கடி நிலைமையில் எதிர்வினையாற்றும் வகைமையில் உள்ளடங்காத சில பேழுக்கள் மனிதவளத்தை வழங்கின. நிதி வழங்க முடியாத பேழுக்கள் தானாக முன்வந்து உளவளத்துணை மற்றும் ஆலோசனையை வழங்கின. அவர்கள் வறுமையால் பாதிக்கப்பட்ட இடங்களையும் மக்களையும் பார்வையிட்டு உதவிகளை வழங்கினர். உதாரணமாக, இதுபோன்ற பேழுக்களில் பணிபுரியும் சில பெண்கள் வீடுகளுக்குச் சென்று அரிசி மற்றும் பிற தானியங்களை சேகரித்து வெளியில் கஞ்சி தயாரித்து பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகித்ததாகக் கூறினர்.

இந்த நிகழ்வுகள் பேழுக்களும் பிரதேச செயலகங்களும் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் திருப்திகரமான ஒருங்கிணைப்பைப் பேணுகின்றன என்பதைக் காட்டுகின்றன. பேழுக்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஒன்றிலொன்று தங்கியிருப்பது ஒருங்கிணைத்தலின்போது நன்மை பயக்கும். எவ்வாறாயினும், எமது அவதானிப்புகளின்படி, பிரதேச செயலகங்கள் பேழுக்களை பெரிதும் சார்ந்துள்ளன் எனத் தெரிகிறது.

## பகுப்பாய்வு

இந்த ஆய்வின் அடித்தளம் ஐந்து முக்கிய கேள்விகளை அடிப்படையாகக் கொண்டது - இவை கணக்கெடுப்பின்போது கேள்விகளை உருவாக்குதல் மற்றும் பண்புசார் ஆய்வின்போது கேள்வி எழுப்புதல் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த அறிக்கையின் தொகைசார் மற்றும் பண்புசார் ஆய்வுப் பிரிவுகள் இந்தக் கேள்விகளை விரிவாக ஆராயும் அதே வேளை, முந்தைய அத்தியாயங்களில் பகிரப்பட்ட தகவலின் முக்கிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் ஆய்வுக் கண்டுபிடிப்புகளின் சாராம்சத்தை நாம் இந்தப் பிரிவில் வழங்குகிறோம்..

1. வன்முறைச் சம்பவங்களைத் தீர்ப்பதில் சிவில் சமூக அமைப்புகளின் வகிபாகம் என்ன? உள்ளூர் மட்டத்தில் இதன் நிலை என்ன? தேசிய மட்டத்தில் இதன் நிலை என்ன? தற்போது இந்த பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள்?

முதலாவதாக ஊளுழுக்கள் ஒரு பிராந்தியத்தை மையமாகக் கொண்டு எவ்வாறு செயற்படுகின்றன என்பதற்கும் தேசிய மட்டத்தில் வேலைத்திட்டங்கள் அல்லது பிரச்சாரங்களை மேற்கொள்ளும் போது எவ்வாறு செயற்படுகின்றன என்பதற்கும் இடையில் வேறுபாடுகள் புலப்படுகின்றன. உள்ளூர் மட்டத்தில் பதிலளிப்புகள மிகவும் நேரடியானவையாக உள்ளதோடு ஊளுழுக்கள் சமூகங்களுடன் நெருக்கமாகப் பணிபுரிய முனைகின்ற அதேே

வளை, தேசிய அளவில் ஊஊுழுக்கள் பெரும்பாலும் விழிப்புணர்வு வேலைதிட்டங்கள் அல்லது பிரச்சாரங்களில் வேலை செய்கின்றன.

குவிநோக்குக் குழுக் கலந்துரையாடலில் ஊஊுழு ஊழியர்கள் ஊழுஏஐனு-19 பெருந்தொற்றின்போது, சில விளிம்புநிலைக் குழுக்களுக்கு (உ-ம்: பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள்) முன்னுரிமை அளிக்கப்பட்டது என்றும், முதியவர்கள் போன்ற ஏனைய விளிம்புநிலைக் குழுக்கள் யதேச்சையாகப் புறக்கணிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.

தேசிய மட்டத்திலான ஊஊுழுக்களைப் பொறுத்தவரை 20 நிறுவனங்கள் மட்டுமே கணக்கெடுப்புக்கு பதிலளித்தன. பதிலளித்தற்றுள் சில ஊஊுழுக்களுக்கு பிராந்திய அலுவலகங்கள் உள்ளன. பிராந்திய அலுவலகங்களைக் கொண்ட ஊஊுழுக்கள் உள்ளூர் அதிகாரிகள் மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளதோடு உள்ளூர் மட்டத்திலான ஏனைய ஊஊுழுகளைப் போலவே செயற்படுகின்றன.
ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சாராத, ஆனால் திடீர் வன்முறை அல்லது அனர்த்த் நிலைமைகளைத் தொடர்ந்து நிவாரணப் பணிகள் மேற்கொள்ளும் அல்லது ஆய்வறிக்கைகளைத் தயாரிக்கும் அமைப்புகள் சில தனிப்பட்ட தொடர்புகளில் தங்கியுள்ளன. அவ்வாறான தனிப்பட்ட தொடர்புகள் நம்பகத்தன்மை அற்றதாகவோ செயன்முறையை இன்னும் தாமதப்படுத்துவதாகவோ இருக்கக்கூடும். பிராந்திய மட்டத்தில் பேழுக்களின் வலையமைப்புகள் இருந்தால் இந்தக் குழுக்கள் உதவிக்காக பிராந்திய வலையமைப்புகளை அணுகியிருக்கலாம்.

2. ஊஊுழுக்கள் திடீர் மற்றும் எதிர்பாராத வன்முறைச் சம்பவங்களுக்கு எவ்வாறு எதிர்வினையாற்ற வேண்டும்? அவ் எதிர்வினைகள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும்?

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள், ஊஊுழுக்களுக்கு எதிர்பாராதவையாக இருந்த அதேவேளை, முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான தாக்குதல்கள் உடனடியாக எதிர்பார்க்கப்பட்டனவாக இருந்தன. இந்த வன்முறை எவ்வாறு வெளிப்படும், எந்த அளவிற்கு வெளிப்படும் என்பது தெரிந்திருக்கவில்லை. தேசிய மட்டத்தில் சில குழுக்கள் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை மேற்கொண்டபோது - உதாரணமாக, அவசரகால விதிமுறைகளின் நிகாப் தடை சார்ந்து - ஹிஜாப் மற்றும் நிகாப் இடையே உள்ள வேறுபாடு குறித்து பொதுமக்களுக்கு தெளிவூட்டுவதற்காக பல்வேறு சமூக ஊடகப் பதிவுகளை வெளியிட்டது. முஸ்லிம் பெண்கள் துன்புறுத்தப்படுவதை தடுக்கும் நோக்கில் இது மேற்கொள்ளப்பட்டது.

அதேபோன்று கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக இறந்தவர்கள் தகனம் செய்யப்படுவார்கள் என்று அரசாங்கம் அறிவித்தபோது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. புதைக்கப்படுவது என்பது ஏற்புடையதாக இருந்தபோதிலும், உலகின் பிற பகுதிகளில் அது மேற்கொள்ளப்பட்டாலும் இலங்கையில் அது ஒரு தெரிவாக இருக்கவில்லை. இது முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான மோசமான பாரபட்சமாக அவதானிக்கப்பட்டது. இதன்போதும் கொவிட்-19 காரணமாக உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வது ஏற்புடையது என்பதை உறுதிப்படுத்திய மருத்துவ நிபுணர்களது கருத்துக்களை ஊக்குவிக்கும் வகையில் சமூக ஊடகப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பிராந்திய அல்லது உள்ளூர் மட்டத்தில் நம்முடன் பேசிய சில ஊஊுழுக்கள் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு பின்னர் இனரீதியான பதற்றம் குறித்து எச்சரிக்கையாக இருப்பதாகக் குறிப்பிட்டன. தாம் பணிபுரிந்த பிராந்தியங்களில் உள்ள மக்களுடன் நீண்ட காலமாக நம்பகமான உறவைக் கொண்டிருந்ததால், வன்முறையாக வெடிக்கக்கூடிய சூழ்நிலைகளை அவர்களால் அடையாளம் காணவும் நிலைமையைத் தணிக்கவும் முடிந்தது.

உள்ளூர் அளவிலான நிவாரணப் பணிகளுக்கு மற்றொரு உதாரணம், நாம் நேர்காணல் செய்த சில ஊஊுழுக்கள், கொவிட்-19 ஊரடங்குகளின்போது இக்கட்டான நெருக்கடியில் இருந்தவர்களுக்கு உதவுவதற்கான நிதி வசதியைப் பெற முடியாத நிலையிலும் நன்கொடைகளைப் பெறுவதற்கு அப்பகுதியில் உள்ள செல்வந்தர்களை அணுகியிருந்தன. அச் சமூகங்களுடன் பல ஆண்டுகள் பணியாற்றியதனால் அவர்கள் பெற்ற நம்பகத்தன்மை காரணமாக ஊஊுழுக்களின் உறுப்பினர்கள் மீது நன்கொடையாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கையினால் மட்டுமே இது சாத்தியமானது.

3. ஒரு சூழ்நிலை வன்முறையாக மாறுவதிலிருந்து தடுக்கும் காரணிகள் யாவை? ஒரு சூழ்நிலை அமைதியாக கையாளப்படுவதற்கு உதவும் காரணிகள் யாவை?

பிழையான தகவல் என்பது தவறாக வழிநடத்தும் நோக்கத்துடன் பரப்பப்படும் பொய்யான தகவல் ஆகும். இதில் அரசு அல்லது பிற அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் பிரச்சாரமும் அடங்கும். இலங்கையில், வன்முறையைத் தூண்டுவதற்கு, குறிப்பாக இனரீதியான அல்லது மதரீதியான பிரச்சினைகள் சார்ந்த பிழையான தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, 2018ஆம் ஆண்டில், ஒரு முஸ்லிம் கடை உரிமையாளர் இரவு உணவில் கருத்தடை மாத்திரைகள் கலந்து கொடுத்தார் என்ற பொய்யான கூற்றுக்குப் பின்னர் சிங்களவர் குழுவொன்று அந்தக் கடையைத் தீயிட்டுக் கொளுத்தியது.

கடை உரிமையாளரை கட்டாயப்படுத்தி உணவில் கருத்தடை மாத்திரைகள் கலந்ததாக ஒப்புக்கொள்ள வைத்த வீடியோ பதிவு சமூக ஊடகங்களில் பரவியது (சண்டே ஒப்சர்வர், 2018). அம்பாறையில் கலவரம் வெடிப்பதற்கு முன்பாகவே இதன் விளைவாக முஸ்லிம்களுக்கு சொந்தமான பல உணவகங்கள், பள்ளிவாசல் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட பஸ் வண்டிகள் எரிக்கப்பட்டன.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, கருத்தடை மாத்திரைகள் என்பது ஒரு கட்டுக்கதை என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்க அரசு மற்றும் பல முக்கியமான தனிநபர்கள் அறிக்கைகளை வெளியிட்டனர்.

முதலாவதாக உணவில் கருத்தடை மாத்திரைகள் சேர்க்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அரசாங்க ஆய்வாளர் நிராகரித்தார் (ஜெயவர்தன, 2018). அடுத்தபடியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க, கருத்தடை மாத்திரைகள் கதை கற்பனையானது என ஓர் அறிக்கையை வெளியிட்டார் (டெய்லி மிரர், 2018). ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளரும் இலங்கைக்கான றூர்மு பிரதிநிதியுமான கலாநிதி ரஸியா பென்ட்ஸே மற்றும் இலங்கைக்கான ருகேூயு பிரதிநிதி திருமதி ரிட்சு நாக்கென் ஆகியோர் அதனை உறுதிப்படுத்தினர் (ருகேூயு, 2018). மேலும் 200 இற்கும் மேற்பட்ட இலங்கை மருத்துவர்கள் குழு கருத்தடை மாத்திரைகள் என எதுவும் இல்லை என்று வலியுறுத்திக் கூறியது (சண்டே டைம்ஸ், 2018).

எவ்வாறெனினும் இது பொதுமக்களின் கருத்தில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. 2020 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து மீண்டும் இவ்வாறான கட்டுக்கதைகள் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டன. சிங்களப்பெண்டிரை மலடாக்குவதற்காக முஸ்லிம் உரிமையாளருக்குச் சொந்தமான நோலிமிட் ஆடையகத்தில் விற்கப்படும் உள்ளாடைகளில் மலட்டுத்தன்மையை

ஏற்படுத்தும் பொருள்கள் உள்ளடங்கியிருப்பதாகவும் ஒரு கட்டுக்கதை பரவியது. நூற்றுக்கணக்கான நிபுணர்கள் இவற்றை கட்டுக்கதையை மறுத்தாலும், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை வெடிக்கும் போதெல்லாம் வசதியாக வருவிக்கப்படும் வதந்தி என இதனை விவரிக்கலாம்.

2020 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பிறகு நிகழ்ந்த பல முஸ்லிம் எதிர்ப்பு வன்முறைச் சம்பவங்களும் தவறான தகவல்களின் விளைவாகவே நடந்தேறின. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகம் இலக்கு வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்தத் தாக்குதல்கள் எவ்வாறாக வெளிப்படும் என்பது அறியப்படாததாகவோ அல்லது எதிர்பாராததாகவோ இருந்தது.

குறிப்பாக தீய எண்ணத்துடன் தவறான தகவல் பரப்பப்பட்ட ஒரு சம்பவமாக சிங்களப் பெண்களின் அனுமதியின்றி பல கருத்தடை சிகிச்சைகளை செய்ததாக பெண் நோயியல் மருத்துவ நிபுணரான மருத்துவர் 'ரபி ' ஹாப்தீனுக்கு எதிராக சிங்களப் பத்திரிகை ஒன்றில் பொய்யான கூற்றுக்கள் வெளியிடப்பட்ட சம்பவத்தைக் குறிப்படலாம். அது நிச்சயமாக முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக ஏற்கனவே எரிந்துகொண்டிருந்த வன்மத்தீயில் எண்ணெய்யைச் சேர்த்தது (விஜேதாச, 2022).

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையுடன் சம்பந்தப்பட்ட, பிழையான பரப்புரை நிகழ்ந்த மற்றொரு சம்பவம் பெருந்தொற்றின் போது கொவிட்-19 வைரஸ் காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வதுடன் தொடர்பு பட்டதாகும். பல நிபுணர்களும் சர்வதேச அமைப்புகளும் கொவிட்-19இல் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வது சாத்தியம் எனக் கூறியபோதும் முஸ்லிம் உடலங்களை அடக்கம் செய்வதற்கான வாய்ப்பை வழங்காது தகனம் செய்வதையே அரசு வலியுறுத்தியது. (யுட-னுயறழழனல ரூ குனைெபயெ, 2020) (Carmen & Tegal, 2021).

போலிப்பரப்புரைகள் என்பது இலங்கையில் ஒரு வளர்ந்து வரும் பிரச்சனையாக உள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி இதனை தடுக்க வேண்டும். ஏனெனில் கெஹான் குணதிலக்க கூறுகையில், பொய்யான தகவல்களை எதிர்கொள்வது குறிப்பாக அரசினால் பரப்பப்படுவனவற்றை எதிர்கொள்வது மிகவும சிக்கலானது. சில நேரங்களில் தனியார் ஊடகங்களும் அவற்றுக்கு உடந்தையாக இருக்கக்கூடும். எனக்குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: சிவில் சமூகம் மற்றும் சுதந்திரமான ஊடகத்தை வலுவூட்டல் மற்றும் இந்தத் துறைகளை தீய நோக்கங்களுக்கு நெறிப்படுத்தும் நிகழ்ச்சி நிரல்களிலிருந்து பாதுகாத்தல் ஆகியவை முக்கியமானவை. உண்மையில் இலங்கையில் தவறான தகவல்களை எதிர்கொள்வது என்பது ஒழுங்குபடுத்தும் திட்டமாக அல்லாது எதிர்த்து நிற்கும் ஒரு திட்டமாக மாற வேண்டும் (2021).

ஒரு சூழ்நிலையை அமைதியாகக் கையாளும் காரணிகளின் இரண்டாவது பாகத்தைப் பொறுத்தவரை எமது பண்புசார் ஆய்விலிருந்து நாம் கண்டுகொண்ட விடயமாவது, வன்முறையைத் தூண்டக்கூடிய காரணிகள் மற்றும் சூழ்நிலையைத் தணிக்கும் காரணிகள் ஒத்தவை அல்ல, அவை சூழ்நிலை, பிராந்தியம் மற்றும் இன வன்முறை அல்லது பதற்றத்தின் வரலாறு போன்ற இன்னோரன்ன காரணிகளில் தங்கியுள்ளன என்பதாகும்.

ஒரு ஊளுமுஇன் உறுப்பினர்கள் ஒரு சூழ்நிலையைத் தணிக்க முடிந்ததென்றால் அது அவர்கள் அப் பிராந்தியத்தில் நன்கு அறியப்பட்டவர்கள் மற்றும் நம்பகமானவர்கள் என்பதனால் ஆகும். அவர்கள் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் பல தசாப்தங்களாக அப்பகுதியில் பணியாற்றிய நீண்டகால செயற்பாட்டாளர்கள் என்பதாலும், சமூகத்துடன் வலுவான உறவைக் கட்டியெழுப்பியவர்களாக இருப்பதாலும் அவர்களுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி நிலைமை மேலும் மோசமடையாமல் பார்த்துக் கொள்ள முடிந்தது.

வன்முறைக்கு வழிவகுக்கும் சூழ்நிலைகளைத் தணிப்பதில் அவர்கள் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தபோதிலும் அத்தகைய பணிகளை மேற்கொள்வதற்கென்றே ஒரு பெரிய குழு நியமிக்கப்பட்டிருப்பிம் அது மிகவும் உதவியாக இருக்கும். ஏனென்றால், ஒரு தனிநபர் வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே அத்தகைய பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும். ஒரு தனிநபருக்கு இது பெரும் சுமையாக இருக்கும். மேலும் எல்லா சந்தர்ப்பங்களிலும், இந்த நபர்கள் ஊளுமுக்களில் அவர்கள் ஊதியம் பெறும் பணிக்குப் புறம்பாகவே இத்தகைய பேச்சுவார்த்தைகள் நடத்தி அல்லது பிரச்சனைகளைத் தீர்த்து வைத்துள்ளனர்.

அவர்கள் சமூகத்தின் மீது ஆழமான பொறுப்புணர்வைக் கொண்டுள்ளனர். மற்றும் ஊதியம் பெறும் பணிக்கு மேலதிகமாக தமது வேலைப்பளுவுக்கு மத்தியில் தம்மால் ஆற்றப்படவேண்டும் என அவர்கள் உணர்கிற சமூகப் பணிகளிலும் தன்னார்வத்துடன் ஈடுபடுகிறார்கள். அவர்கள் சமூகத்துடன் மிகவும் பரிச்சயமானவர்களாகவும் பிரச்சனையை தீர்க்கும் திறன் மற்றும் நிபுணத்துவம் கொண்டவர்களாகவும் இருப்பதால் இந்த சிக்கல்களை கையாள்வதற்கு அவர்களே மிகவும் பொருத்தமானவர்கள்

4. திடீர் / எதிர்பாராத வன்முறைச் சம்பவங்களுக்கு விளைதிறன் மிக்க முறையில் எதிர்வினை ஆற்றுவதில் ஊளுமுக்கள் சந்திக்கும் தடைகள் யாவை?

தொகைசார் தரவுகளின்படி, நாடு முழுவதும் உள்ள ஊளுமுக்கள் எதிர்கொள்ளும் பொதுவான தடைகளில் ஒன்று வளங்களின் பற்றாக்குறையாகும். இது தொழினுட்ப வளங்கள் முதல் குறிப்பிட்ட நிபுணத்துவம் கொண்ட ஊழியர்கள் வரையான பரப்பு எல்லையை உடையது.

அரசின் வளங்கள் மற்றும்∴அல்லது ஆதரவான பொறிமுறைகள் இல்லாதது ஊளுமுக்கள் எதிர்கொள்ளும் பொதுவான சவால்களில் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. எனவே, ஊளுமுக்கள் உள்ளூர் அரச நிறுவனங்களுடன் இணைந்து சிறப்பாகச் செயற்படும் அதே வேளையில், எதிர்பாராத வன்முறைக்கு எதிர்வினையாற்றும் போது ஊளுமுக்களுக்கு உதவுவதற்கு ஏற்றவகையில் அந் நிறுவங்கள் சிறப்பாக வளங்கள் அளிக்கப்பட்டு, சிறந்த ஆதரவுப் பொறிமுறைகளுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஊளுமுக்கள் எதிர்கொள்ளும் மற்றொரு பொதுவான சவால் என்னவென்றால், அவை குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டனவாகவும் விரும்பியபடி வன்முறைக்கு எதிர்வினையாற்றுவதற்கான இயலுமை அற்றனவாகவும் காணப்படுவதாகும்.

கொவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு இந்த ஆய்வு நடத்தப்பட்டதால், பெரும்பாலான ஊளுழுக்கள் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் ஊரடங்குச் சட்டம் ஆகியவற்றை வேலைதிட்டங்களை நிறைவு செய்வதற்கான தடைகள் எனக் கூறியுள்ளன. நெருக்கடி நிலைமைகளில் ஏற்படக்கூடிய ஒரு பொதுவான நிகழ்வு அல்ல என்பதால் எரிபெ-ாருள் பற்றாக்குறையானது புறக்கணிக்கப்படலாம். எனினும், அவசரகால சட்டம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் ஒரு பொதுவான நிகழ்வு. உதாரணமாக, 2014இல் அளுத்கம கலவரம், 2018இல் திகன கல-வரம், 2019இல் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு மற்றும் 2021இல் அரசியல் நெருக்கடியின் போது ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமையை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அவசரகால நிலைமை மற்றும் ஊரடங்குச்சட்டம் என்பன இல்லாதிருந்தால், ஊளுழுக்கள் உதவி தேவைப்படும் மக்களை இலகுவாக அணுக முடியும். மாற்றாக, நிலைமை தீவிரமடைவதைத் தடுக்க ஒரு விரைவான வழி-முறையாக ஊரடங்குச் சட்டம் அவசியம் என்று அரசாங்க மூலங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. எவ்வாறாயினும், 2018 திகன கலவரங்களில் நிகழ்ந்தது போல் இராணுவம் அல்லது பொலிஸார் குறிப்பிட்ட ஒரு குழுவின் மீ-தான வன்முறைப் பிரச்சினையில் பங்காளியாக இருந்த சந்தர்ப்பங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன (டுளுவு 2020).

5. வன்முறை நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்றுதலிலான ஊளுழுக்களின் வகிபங்குக்கு கட்டமைப்பு சீர்-திருத்தங்கள் எவ்வாறு உதவ முடியும்?

இயற்கை அனர்த்தங்கள் முதல் இனவாத வன்முறைகள் வரையி வன்முறைகளுக்குப் எதிர்வினை ஆற்றுவதில் மட்டக்களப்பில் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஊளுழுக்களுடன் எவ்வாறு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதைப் பார்க்கும்போது, கட்டமைப்பு பொறிமுறைகள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. இந்த உறவை மற்ற பிராந்தியங்களிலும் மீண்டும் உருவாக்குவது அவசியம். பொலன்னறுவை போன்ற ஏனைய மாவட்டங்களில் பிரதேச செயலகங்கள் குறிப்பாக அரச சார்பற்ற நிறுவனப் பிரிவு இது தொடர்பில் இயங்கவில்லை என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

உடனடி எதிர்வினை என்பது ஒருபுறம் இருக்க, ஆண்டின் தொடக்கத்தில் பிரதேச செயலகத்திற்கு ஊளுழுக்கள் வருகை தரும் போது அல்லது புதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டு ஊளுழுக்கள் அவர்களுக்கு விளக்கமளி-க்கும்போது, அதிகாரவாதம் மற்றும் காகிதங்களைத் தவிர்க்க இலத்திரனியல் தொகுதிகள்.்.நிரல்களை வை-த்திருப்பது பெரும் உதவியாக இருக்கும். அவற்றின் பணிகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டால், மாவட்டத்தின் எந்தெந்தப் பகுதிகளில் - கடந்த காலத்தில் மற்றும் தற்போது எவ்வெந்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள-ப்படுகின்றன என்பது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடும் மென்பொருள் நிரல்களுடன் ஊளுழுக்கள் முன்வை-ப்புகளை மேற்கொண்டு காகித வேலைகளில் செலவிடும் நேரத்தை மிச்சப்படுத்தலாம்.

# பரிந்துரைகள்

மட்டக்களப்பில் உள்ள ஊஎழுக்கள் எவ்வளவு சிறப்பாக குறிப்பாக பிரதேச செயலகத்துடன் செயல்படுகின்றன என்பதைக் கருத்திற்கொள்ளும்போது ஊஎழுக்கள் மாவட்டச் செயலகத்துடன் வலுவான உறவைக் கொண்டிருப்பது மதிப்புக்குரியது அது பேழு செயலகம் வழியாக இருக்கலாம். எமது தேசிய மட்டத்திலான ஆய்வுக் கண்டுபிடிப்புகளின்படி, பெரும்பாலான ஊஎழுக்கள் பிரதேச செயலகங்கள் மிகவும் உதவிகரமாக இருப்பதாகக் கண்டறிந்தனர், பிரதேச செயலகங்களுடன் பணிபுரியும் போது ஒரு சிறுபான்மை மட்டுமே சிக்கல்களை எதிர்கொண்டனர். ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ள அனர்த்த தயார்நிலைப் பிரிவுடன் இணைந்து ஊஎழுக்கள் திடீர் வன்முறையைத் தணிப்பதில் அல்லது எதிர்வினையாற்றுவதில் ஈடுபடலாம்.

- ☐ பிரதேச செயலகமானது ஊஎழுக்களுக்கு பயனளிக்கும் தகவல்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக எதிர்பாராத வன்முறைக்கு எதிர்வினையாற்றும் போது மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை இனங்காணல் போன்ற விடயங்களில் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

- ☐ பிராந்திய தரவுகளின்படி, பெரும்பாலான ஊஎழுக்கள் பிராந்தியத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் போன்ற உள்ளூர் அரச நிறுவனங்களுடன் பணிபுரியும்போது எந்தவிதமான பாதகமான பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவில்லை. இருப்பினும், இது சில குறிப்பிட்ட பணிப்பரப்புகளுக்கு உட்பட்டதாக இருக்கலாம் என்பதை இங்கே கவனிக்க வேண்டியது அவசியம். ஆய்வு கண்டுபிடிப்புகளின் சகபாடிகள் குழு ஆலோசனையின் போது, குறிப்பாக டுபுடீவு பிரச்சினைகள் தொடர்பாக பணிபுரியும் ஒரு பேழு, உள்ளூர் அரச நிறுவனத்திடமிருந்து கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டதாகக் கூறியது. அவர்கள் தமது பணி முதன்மையாக டுபுடீவு சமூகத்தை உள்ளடக்கியது என்பதை நேரடியாகக் குறிப்பிடாமல், பணியைச் செய்வதாகவும் கூறினார்கள்.

- ஒரு பிராந்தியத்தில் ஊஎழுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு. ஊஎழுக்கள் தனித்தனியே இயங்காது புரிந்துணர்வுடன் இயங்குவதை உறுதிசெய்யக்கூடிய ஊஎழுக்களுக்கான பிராந்திய வலையமைப்பு.

- ☐ ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்யாமல் இருப்பதையும், உதவிகள் நியாயமான முறையில் விநியோகிக்கப்படுவதையும் உறுதிசெய்ய இது உதவும்.
- ☐ குறிப்பிட்ட பிராந்தியங்களில் இதே போன்ற பிரச்சினைகள் தொடர்பாக பணிபுரியும் ஊஎழுக்கள் ஒன்றாகச் செயற்பட்டு சிறந்த பெறுபேறுகளைத் தர முடியும்.
- ☐ தேசிய மட்டத்தில் பணியாற்றும் பேழுக்களும் அடிப்படை மட்டத்தில் பணியாற்றும் ஊஎழுக்களும் அவர்களுககிடையே, இது அறிவைப் பரிமாற்றிக் கொள்வதற்கும் உதவக்கூடும்.
- ☐ பல ஊஎழு ஊழியர்கள் தமது உத்தியோகபூர்வ நிகழ்ச்சித்திட்டங்கள்∴வேலைதிட்டங்களுக்குப் புறம்பாக தன்னார்வப் பணிகளையும் செய்வதாகக் கூறினர். இவற்றுள் பாராமுகமாக இருக்க முடியாத திடீர் நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் (உ-ம்: அனர்த்த நிலைமைகள், சாத்தியமுள்ள இன வன்முறையின் எரிபற்றுநிலை) ஆகியவை அடங்கும். ஒரு பிராந்தியத்தில் உள்ள ஊஎழுளக்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பு இருந்தால், இந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கான பெரும் சுமை ஊஎழுக்களின் நெட்வொர்க்கிடையே பகிர்ந்து கொள்ளப்படும்.
- ☐ நன்கறியப்பட்ட ஊஎழுக்களின் பிராந்திய வலையமைப்பு இருந்தால் அனர்த்தத்துப் பிந்தைய நிலைமைகளில் நன்கொடைகளை நாடும்போது நம்பகத்தன்மையைக் கொண்டிருக்கும். நன்கொடைகள் அல்லது உதவிகள் நியாயமான முறையில் விநியோகிக்கப்படுவதையும் இது உறுதி செய்யும்.
- ☐ சாத்தியமான வன்முறையை எவ்வாறு கண்டறிவது என்பது குறித்த பகிரப்பட்ட அறிவு. உதாரணமாக, வன்முறைக்கு வழிவகுக்கக்கூடிய கலவரங்கள் போன்ற இனரீதியான முறுகல் நிலையை எவ்வாறு கண்டறிவது, அந் நிலைமையை எவ்வாறு தணிப்பது. மட்டக்களப்பில் உள்ள ஒரு ஊஎழு குறிப்பிட்டது போல், சூழ்நிலைகளை அவர்களால் அடையாளம் காண முடிந்ததால் அவற்றைத் தணிக்க முடிந்தது.
- ☐ அனர்த்த∴வன்முறைக்கான தயார்நிலைக்கு பிராந்திய வலையமைப்புகள் முன்னதாக வன்முறை நடந்த பகுதிகளை ஆய்வு செய்து மதிப்பீடு செய்யலாம் (குறிப்பாக பிராந்திய வன்முறைக்கான அதிக வாய்ப்புகள் உள்ள இடங்கள்). இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு மேற்கொள்ள

☐ ப்பட வேண்டும் என்று நாம் பரிந்துரைக்கிறோம். இத் துறையில் பணிபுரியும்போது அவர்கள் பெற்ற அனுபவங்கள் அல்லது அறிவின் அடிப்படையில் ஊளுழுக்களின் கருத்துகள் அல்லது பின்னூட்டங்களையும் அது உள்ளடக்கியிருக்கலாம்.

சாத்தியமுள்ள பாதிப்புகள் குறித்து மதிப்பீடுகளை மேற்கொள்ளல் (விளிம்புநிலை சமூகங்கள் மீது மட்டும் கவனம் செலுத்தாமல், அதிகமாக பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதும் கவனம் செலுத்தல் - இது விளிம்புநிலை குழுக்களின் எல்லையை விட பரந்ததாக இருப்பதோடு வகுப்பு வேறுபாடுகள் மற்றும் மக்களை பாதிப்புக்கு உள்ளாகக்கூடியவர்களாக ஆக்கக்கூடிய அல்லது உதவிகளைப் பெறுவதில் சிக்கலை எதிர்நோக்கக்கூடிய பிரதேசங்களில் உள்ள மக்கள்.᠃குடும்பங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும்). பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் மீதான கவனம், பாதிப்பு மற்றும்.᠃அல்லது பாதிக்கப்படக்கூடிய மற்றும் விளிம்புநிலைப் படுத்தப்படக்கூடிய தன்மையின் குறுக்குவெட்டுகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, 2018 திகன கலவரத்தைத் தொடர்ந்து, ஒரு முஸ்லிம் குடும்பத்துக்குச் சொந்தமான பைகள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை தாக்கப்பட்டது. இதனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பை தொழிற்சாலையில் பணிபுரிந்த சிங்களத் தாய்மார்கள், ஒரே இரவில் வருமானத்தை இழந்து தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் போன அவர்களுக்கு கலவரத்தின் பின்னர் அரசாங்க இழப்பீடு அல்லது ஆதரவைப் பெறுவதற்கான அணுகல் அல்லது உரிமை கூட இல்லை (டுளுவு, 2020). தொடர்ந்தும் வருமானம் ஈட்ட வேண்டும் என்ற உந்துதல் காரணமாக அவர்கள் தமது சொந்த சேமிப்பைப் பயன்படுத்தி சிறு தொழிற்சாலையை மீளவும் கட்டியெழுப்பினார்கள்.

- பால்நிலை அடிப்படையிலான வன்முறை, விளிம்புநிலைக் குழு மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளான குறிப்பிட்ட சமூகங்கள் போன்ற வன்முறையால் பாதிக்கப்பட்ட குழுக்களுக்குப் பிராந்திய தங்குமிடங்கள். பெருந்தொற்று மற்றும் ஊரடங்கு ஆகியன அடிக்கடி நிகழாத நிகழ்வுகள் என்றாலும், கொவிட்-19 பெருந்தொற்று முடக்கங்களின் போது குடும்ப வன்முறை (ருகேீயு, 2020) (பெர்னாண்டோ, 2021) அதிகரித்ததாக பல அறிக்கைகள் உள்ளன. எவ்வாறாயினும் குடும்ப வன்முறை திடீர் அல்லது எதிர்பாராத வன்முறையாகக் கருதப்படலாம். எனவே பெருந்தொற்று நிலைமை இல்லாவிட்டாலும் இது ஆய்வுக்குப் பொருத்தமானது.

ஊளுழுளக்கள் அரசாங்க முகவர்களுடன் (நிர்வாகப் பிரிவுகள், உள்ளூராட்சி மற்றும் மாகாண அதிகாரிகள்) வலுவான உறவைக் கொண்டிருக்க வேண்டும். நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் ஒதுக்கப்பட்ட அலுவலகம் கொண்ட பேழு செயலகத்தின் ஊடாக இதனை அடைய முடியும். தற்போது, ஊளுழுக்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் இடையே பலவீனமான தொடர்புகளைக் கொண்ட சில மாவட்டங்களில் பேழு அதிகாரிகள் இல்லை. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் ஒரு பேழு அதிகாரி நியமிக்கப்படுவதையும், அவர்கள் ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள ஊளுழுக்களுடன் தீவிரமாகப் பணியாற்றுவதையும் உறுதிசெய்ய, இந்த கட்டமைப்புப் பிரச்சினை அரசினால் சீர்செய்யப்பட வேண்டும்.

## பேழு செயலகத்துடனான ஊளுழு ஒருங்கிணைப்பு

பேழுக்கள் மற்றும் ஊளுழுக்களுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்புக்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்ட பேழுக்கள் உட்பட அனைத்து பேழுக்களின் முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஆண்டுத் திட்டங்களின் மெய்ந்நிகர் தரவுத்தளத்தைப் பேணுதல்.

☐ பொதுப் பாதுகாப்பு அமைச்சின் 22.12.2022 தேதியிட்ட சுற்றறிக்கை இல: 8 இன் படி, தேசிய அளவில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள், அரச சாரா நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சாரா நிறுவனங்கள் தமது வேலைத்திட்டங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை அரச சாரா நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். .

☐ வருடாந்த திட்டங்களின் மாவட்ட அளவிலான செயற்பாடுகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும்.᠃மேற்பார்வையிடவும் அவ்வந்த மாவட்ட பேழு ஒருங்கிணைப்பாளர்களுக்கு தலைமை அலுவலகம் வழிகாட்டும்.

[2]https://www.ft.lk/Opinion-and-Issues/police-powers-of-provincial-councils/14-168561

- அதேநேரம், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகமானது, பிரதேச மட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஊளுழுக்களின் வேலைத்திட்டங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதோடு அரச சார்பற்ற நிறுவனங்களால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் திட்டங்கள் தொடர்பான தரவுத்தளத்தை பேண முடியும். இது வேலைத்திட்டங்களைக் கண்காணிக்கவும், மிகையான நிதியளித்தல், குறைவான நிதியளித்தல் தொடர்பான சிக்கல்களைக் கண்டறியவும், தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான ஊளுழுக்களை ஒருங்கிணைக்கவும் மற்றும் தொடர்புகொள்ளவும் உதவும்.
- மக்களுக்கு சேவை செய்ய நிதி மற்றும் வரிப் பணத்தை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கான கொள்கை உருவாக்கம் மற்றும் வளர்ச்சியில் அரசாங்கத்திற்கு உதவும் பணியில் பேழு செயலகத்துக்கு இது உதவக்கூடும்.
- தரவுத்தளத்தின் தகவல்களின் அடிப்படையில், பேழு செயலகம், ஒரே பிரச்சினைகள் சார்ந்து மற்றும் ஒரே வகையான வேலைத்திட்டங்களில் பணிபுரியும் பிரதேச மற்றும் தேசிய அளவிலான ஊளுழுக்களை இணைக்க முடியும்.

மேலும், பேழு செயலகம் இதுவரை தீண்டப்படாத அபிவிருத்தி தேவைப்படும் பகுதிகள் குறித்து ஊளுழுக்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஆலோசனை கூறலாம்.

## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களை உருவாக்குதல்

ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட 1999 பெப்ரவரி 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல. RAD/99/01 இவ்வாறு கூறுகிறது: ஒவ்வொரு மாவட்டத்திலும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஒன்று நிறுவப்படும். இந்தக் குழு பின்வரும் அதிகாரிகளைக் கொண்டதாக இருக்கும்.

- மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்- தலைவர்
- மாவட்ட திட்டமிடல் செயலகத் தலைவர்- உறுப்பினர்
- சமூக சேவைகளுக்குப் பொறுப்பான மாகாணச் செயலாளர் - உறுப்பினர்
- மாகாண பிரதம செயலாளரின் பிரதிநிதி- உறுப்பினர்
- பிரதம செயலாளரால் பரிந்துரைக்கப்பட்ட சமூக சேவை அதிகாரி - உறுப்பினர்

நேர்காணல்கள், ஆய்வுகள் மற்றும் தொலைபேசி அழைப்புகளின்போது மாவட்ட அளவில் குழுக்கள் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டாலும், மேலே பட்டியலிடப்பட்ட குழுவிலுள்ள அதிகாரிகள் கூட்டங்களில் பங்கேற்கவில்லை எனத் தெரிகிறது. சமூக சேவைகள் தொடர்பான விடயங்களில் மாகாண செயலாளர்களின் தலையீடு பற்றி நாம் கேள்விப்பட்டதில்லை. எனவே, இடைவெளியைக் குறைப்பதற்கும், அரச மட்டத்திலான பங்குதாரர்களின் சிறந்த ஈடுபாட்டை உறுதி செய்வதற்கும், ஊளுழுக்கள் தொடர்பான நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களை தீவிரமாகப் பங்குபெறுவதற்கு பரிந்துரைக்கிறோம்.

- இது அபிவிருத்தி இல்லாத அல்லது மத்திய மற்றும் உள்ளூராட்சி அரசாங்கங்கள் மற்றும் ஊளுழுக்களின் குறைவான கவனத்தைப் பெறும் பிரதேசங்களில் மாகாண சபைகள் கவனம் செலுத்துவதை உறுதிசெய்யக்கூடும்.
- அபிவிருத்தி தேவைப்டும் குறிப்பிட்ட பரப்புகளில் கவனம் செலுத்துவதற்கு மாகாண சபைகள் ஊளுழுக்களுக்கு ஆலோசனைகளை வழங்க முடியும்.
- இந்த விடயத்தில் மாகாண சபைகளை ஈடுபடுத்துவது குறிப்பாக எதிர்பாராத வன்முறைகளைக் கையாளும் போது மிகவும் உதவியாக இருக்கும். இலங்கையின் அரசியலமைப்பின் ஊடாக மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் பட்டியல் ஐ (மாகாண சபை பட்டியல்), அனுபந்தம் 1 (சட்டம் மற்றும் ஒழுங்கு) மாகாண சபைகளுக்கு (அ) நாட்டின் பாதுகாப்பு (ஆ) தேசிய பாதுகாப்பு மற்றும் (உ) சிவில் அதிகாரத்திற்கு உதவுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஆயுதப் படைகள் அல்லது வேறு எந்தப் படைகளையும் பயன்படுத்துதல் ஆகிய அதிகாரங்களைத் தவிர்த்து பொலிஸ் அதிகாரத்தை வழங்குகிறது.

ழ ஊளுழுக்கள் மாகாண சபைகளுடன் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பினைக் கொண்டிருந்தால், எதிர-பாராத வன்முறையை பின்வரும் வழிகளில் கையாளலாம்:

- எதிர்பாராத வன்முறைக்கு எதிராக செயல்படும் ஊளுழுக்கள், பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான கொள்கை உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.
- ஊளுழுக்கள் மற்றும் பொலிஸாரிடையே அறிவு மற்றும் தொழினுட்ப பரிமாற்றம்
- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களில் உள்ளூராட்சி பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும்.

அபிவருத்தித் திட்டங்கள் மற்றும் சமூக சேவைகள் தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் குறித்து ஊளுழுக்கள் மற்றும் மாகாண அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு நிதிப் பயன்பாட்டின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்கும்.

பேழு ஒருங்கிணைப்பாளர்கள் அவ்வந்த பிராந்தியங்களில் நடத்தப்படும் வேலைத்திட்டங்களின் தரவுத்தளத்தை பராமரிக்க, பிரதேச சபை (உள்ளூராட்சி அமைப்புகள்) மற்றும் கிராம சேவகர் அலுவலகம் (நிர்வாகப் பிரிவு) ஆகியவற்றுடன் உறவுகளைப் பேண வேண்டும். பேழு ஒருங்கிணைப்பாளர்களே ஊளுழுக்கள் மற்றும் அரசாங்க முகவர்களிடையே ஒருங்கிணைப்புக்கான முதன்மை கருவிகளாகத் தொகழிற்படுகின்றனர்.

பிழையான தகவல்களுக்கு எதிர்வினையாற்றுதல்

ஊளுழு இன் வலையமைப்பு குறிப்பாக அவர்கள் பணிபுரியும் பிராந்தியத்தில் உள்ள சமூகங்களுடனான அவர்களது வலுவான உறவைக் கருத்தில் கொண்டு. பிழையான தகவல் பரப்புரையை அகற்றுவதில் தீவிரமாக செயற்பட முடியும்.

போலியான செய்திகளை எதிர்ப்பதற்கு பிராந்திய ஊடகவியலாளர்களுடன் இணைந்து பணியாற்றலாம்.

## கொள்கைக் கட்டமைப்பு

பரிந்துரைக்கப்பட்ட கொள்கைக் கட்டமைப்பானது மும்முனை அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது.

- அனர்த்த தயார்நிலை
- எதிர்வினை
- நீண்டகாலப் பின்தொடர்தல்

அனர்த்தத்துக்கான தயார்நிலை

அனர்த்தத்துக்கான தயார்நிலையின் முக்கிய அம்சமாவது அனர்த்தத்தின் தாக்கங்களைத் தணிப்பதும் தடுப்பதும் அனர்த்தத்தால் ஏற்படும் சேதத்தைக் குறைப்பதை உறுதிசெய்ய உதவுவதாகும். தயார்நிலையை வலுப்படுத்துவதில் இரண்டு நோக்கங்கள் உள்ளன: (அ) சேதத்தை கணித்தல், கண்காணித்தல், மற்றும் சேதத்தை குறைத்தல் அல்லது சாத்தியமுள்ள அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறனை அதிகரித்தல், மற்றும் (ஆ) அவசரகால நிலைமையில் எதிர்வினையாற்றுவதை வலுவூட்டுதல் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதல். (UN/IDSR & UN/OCHA, 2008).

அலெக்சாண்டர் (2015) இன் படி, அனர்த்தத்துக்கான தயார்நிலையில் அவசரகால திட்டமிடலின் குறிக்கோள்கள் பின்வருமாறு: (அ) பொதுப் பாதுகாப்பைப் பராமரித்தல் (ஆ) சேதத்தை கட்டுப்படுத்துதல் (சொத்து மற்றும் உட்கட்டமைப்பு) (இ) பாதிக்கப்படக்கூடிய (மக்கள் தொகை மற்றும் சமூக நிறுவனங்களின்) பாதுகாப்பு (ஈ) உயிர் காக்கும் வளங்களை திறம்பட பயன்படுத்துதல் (Tyubee, 2020).

## சட்டவாக்கக் கட்டமைப்பு

சட்டவாக்கமானது:

(அ) வழிகாட்டியாகச் செயற்படுவதோடு, எவ்வெந்தச் செயற்பாடுகளை எவ்வெந்த நிபந்தனைகளின் கீழ் செயற்படுத்தலாம் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) எவ் வகையான வன்முறை நிகழ்கிறது என்பதைப் பொறுத்து, அனர்த்தத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பு யாருடையது என்பதை உறுதியாக நிறுவுதல் வேண்டும்.

(இ) பொருள் மயக்கம், வேலையின் இரட்டிப்பு மற்றும்.'.அல்லது சில பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் புறக்கணிக்கப்படுதல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு தயார்நிலை மற்றும் எதிர்வினையாற்றுதல் ஆகிய கட்டங்களில் முக்கிய அமைச்சுகள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களது வகிபங்கை வெளிப்படையாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) பரவலாக்கப்பட்ட பொறிமுறைகளைத் தெளிவாக நிறுவுதல் மற்றும் சாத்தியமான இடங்களில் சமூகப் பங்கேற்பை ஊக்குவித்தல் வேண்டும்.

(இ) அனர்த்தங்களுக்கான ஆயத்த திறன்களை உருவாக்குவதற்காக நிறுவப்பட்ட ஒட்டுமொத்த தேசிய வரவுசெலவுத் திட்டம் உட்பட தயார்நிலைக்குத் தேவையான நிதி மற்றும் பிற மூலங்களை அடையாளம் காணுதல் மற்றும் ஒரு பாரிய அனர்த்தத்தை எதிர்கொள்ளும்போது மேலதிக அவசரகால அனர்த்த நிதி எவ்வாறு ஒதுக்கப்படலாம் என்பதைக் வரையறுத்தல் வேண்டும்.

(க) ஒரு கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் முறைமையை வரையறுத்தல் வேண்டும். இதன்படி நிறுவனங்கள் மீண்டும் பணிக்குத் திரும்புவதற்கான தயார்நிலை இயலுமையை உருவாக்கிக்கொள்வது அவற்றின் பொறுப்பாவதோடு, அந்த முறைமைக்குள் வகைக்கூறலுக்கான இலக்குகள் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பிராந்திய வலையமைப்புகளுக்கான கட்டமைப்பு

பின்வரும் அட்டவணையை (1) (Tyubee, 2020), பிராந்திய வலையமைப்புகளுக்கான வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம்.

அனர்த்த தயார்நிலை: அணுகுமுறைகள் மற்றும் கட்டமைப்புகள், அட்டவணை 1 தேசிய அனர்த்த தயார்நிலை இயலுமையை வளர்ப்பதற்கான நிறுவனக் கட்டமைப்பு

| கூறுகள் | தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் |
|---|---|
| 1. அமைப்பு | எந்தெந்த நிறுவனங்கள் (அரசு சார்பற்ற நிறுவனங்கள் உட்பட) உள்ளூர், உப-பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் அனர்த்த தயார்நிலைக்கு பொறுப்பாகும்? இது அவர்களின் அதிகாரங்கள், பணித் திட்டங்கள் மற்றும் ஊழியர்களின் வேலை விவரணைகளில் தெளிவாகப் பிரதிபலிக்கிறதா? |
| 2. வகிபங்குள் மற்றும் பொறுப்புகள் | தயார்நிலை இயலுமையை வளர்ப்பதற்கு அவசியமானதாக கருதப்படும் பல்வேறு பணிகள் மற்றும் விளைவுகளுக்கு எவ்வெந்த நிறுவனங்கள் பொறுப்பாக உள்ளன? வெவ்வேறு கூறுகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக ஒருங்கிணைந்த முறையில் ஒத்திசைவாக செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது? |
| 3. ஊடாடுதல் நெறிமுறையின் முன்னேற்ற இணக்கப்பாடுகள் | தயார்நிலைக்கான பொறுப்புகளுடன் வெவ்வேறு நிறுவனங்களுக்கு இடையே நிலையான ஒருங்கிணைப்பையும் மற்றும் தகவல்தொடர்புகளையும் எளிதாக்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளதா? இவை எழுதப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து அமைப்புகளாலும், சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் களப் பணியாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதா? |
| 4. வெளியார் உதவி தொடர்பான நெறிமுறைகள் | அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGO) உதவி, தனியார் நன்கொடைகள் மற்றும் சர்வதேச அல்லது பிராந்திய உதவிகளை கோருவதற்கும் பெறுவதற்கும் தேவைப்பட்டால் ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் முன்கூட்டியே ஒப்புக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதா? |
| 5. சிவில்-இராணுவ உறவுகள் | ஓர் அனர்த்த நிலைமையில் இராணுவ சொத்துக்களை எந்த நிபந்தனைகளின் கீழ் பயன்படுத்த முடியும் என்று முறைமை குறிப்பிடுகிறதா? |
| 6. இயலுமைகளை வலுவூட்டல் | தயார்நிலை மற்றும் எதிர்வினை இயலுமையை உருவாக்கவும் பராமரிக்கவும் என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன? இது அனைத்து மட்டங்களிலும் இயலுமையைல் கட்டியெழுப்புகிறதா? |

*மூலம்: UN/ISDR & UN/OCHA இலிருந்து தொகுக்கப்பட்டது (2008)*

## எதிர்வினை

உடனடி எதிர்வினை

- உடனடி எதிர்வினையானது அனர்த்த தயார்நிலை வரயறையைப் பின்பற்ற வேண்டும். ஆனால் எதிர்பாராத அல்லது திடீர் சூழ்நிலைகளுக்கு எதிர்வினை ஆற்றத்தக்கவாறு நெகிழ்வுத்தன்மையுடன் இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு வன்முறை நிகழ்வுக்கும் ஏற்றாற்போல் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

நிகழ்வின் பின்னரான எதிர்வினை

- பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணரீதியான இழப்பீடு மிகவும் உடனடியாக விநியோகிக்கப்பட வேண்டும். டுளுவு இன் திகன அறிக்கையின்படி (2020) படி, பல பாதிக்கப்பட்ட மக்கள் பணத்தை இழப்பீட்டைப் பெறுவதில் நீண்ட கால தாமதங்களை அனுபவித்தனர், அவர்கள் கலவரங்களின் போது எரிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்ட முடியவில்லை. தபால் சேவை வழியாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு அடிக்கடி அனுப்பப்படுகிறது. ஊரடங்கு, வேலைநிறுத்தங்கள் மற்றும் நீண்ட அரச விடுமுறை நாட்களின் காரணமாக தபால் சேவை பல தடங்கல்களை அனுபவிக்கிறது. எனவே, விநியோகத்துக்கான புதிய முறைமைகள் தேவைப்படுகின்றன.
- பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் பின்தொடர்தல் ஒன்றைச் செய்தல் அவசியம். இது அரசு வழங்கிய இழப்பீட்டை அவர்களின் பெற்றிருப்பதை உறுதிப்படுத்துவதோடு, அவர்கள் உடல், உள ரீதியாக ஆரோக்கியமாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் வன்முறை இனவாதம் அல்லது மதரீதியான முரண்பாடுகளால் வன்முறைக்கான உந்துதல் ஏற்பட்டால் எவ்வாறு பழுதுபார்த்தல்கள் செய்யபப்படும் என்பதை மதிப்பீடு செய்கிறது.

### நீண்ட கால / பின்தொடர்தல்

*ஊளுழுக்களால் நீண்ட கால பின்தொடர்தல் என்பது மதரீதியாக அல்லது அரசியல் ரீதியாக ஊக்குவிக்கப்படும் கலவரங்கள் போன்ற வன்முறை தொடர்பான பிரச்சினைகள் சார்ந்து செயற்படுத்தப்படுகிறது. இது ஊளுழுக்களின் பணிப்பொறுப்பில் சேர்க்கப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சமூகங்கள் எவ்வாறு சமாளிக்கின்றன என்பதையும், வன்முறை வெடித்தால் அவர்கள் எவ்வாறு மீண்டு வருகிறார்கள் என்பதையும் ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் ஆய்வு செய்து நோக்கலாம்.*

*இந்த ஆய்வு அறிக்கைகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்துக்காக இன்னும் செய்ய வேண்டியவை என்ன என்பதைத் தெரிவிப்பதோடு அரசு மற்றும் ஊளுழு உதவ முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இந்த அறிக்கைகள், அனர்த்த தயார்படுத்தல் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும், சமூகத்திலும் பங்குதாரர்களின் தொழிற்பாடுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும்*

*(உ-ம்: சட்டவாக்கத்தில் மாற்றங்கள், அவசர ஒழுங்குமுறைகளிலான மாற்றங்கள், ீவுயு / யுவுயு என்பனவற்றில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், அமைச்சுகளிலான மாற்றங்கள், அரசியலமைப்பின் 13ஆவது உத்தேச சீர்திருத்தத்தை அமுல்படுத்துதல்) பயன்படுத்தப்படலாம்.*

# முடிவுரை

நாடளாவிய மட்டத்திலான ஓர் ஆய்வை மேற்கொண்டதனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊளுழுக்களின் தொழிற்பாடுகள் நாளாந்த நடவடிக்கைகளின் போது எவ்வாறு அமைகின்றன என்பது தொடர்பிலும் எதிர்பாராத வன்முறைக்கு பதிலளிக்கும் போதும் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது தொடர்பிலும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஒரு குறிப்பிட்ட கவனம் செலுத்தி தகவல்களை திரட்ட முடிந்தது.

நாம் குறிப்பாக அங்கு மிக உச்ச அளவிலான ஊளுழு ஈடுபாடு காணப்பட்ட மட்டக்களப்பு தொடர்பிலும் மிகவும் குறைந்த அளவிலான ஈடுபாடு காணப்பட்ட பொலன்னறுவை தொடர்பிலும் மிகவும் ஆர்வமாக இருந்தோம். அத்துடன் நாடளாவிய ரீதியில் பெரும்பாலான மாவட்டங்களில் பல்வேறு காரணங்களால் தனித்தனியான சவால்கள் உள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளோம்.

இருப்பினும், இந்த ஆய்வு குறுகிய காலப்பகுதியை கொண்டிருப்பதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊளுழுக்கள் எதிர்கொள்ளும் சவால்களை விவரணையுடன் விளக்க எம்மால் முடியவில்லை. இது நிச்சயமாக எதிர்கால ஆய்வுக்கு ஒரு சுவாரசியமான பகுதியாக இருக்கும். எம்மால் சேகரிக்க முடிந்த தகவல்களை வைத்துப்பார்க்கும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊளுழுக்களின் ஈடுபாட்டை பாதிக்கக்கூடிய பிரத்தியேக அரசியல் மரபுகளைக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகிது. ஆனால் வரலாறு பூராகவும் குறிப்பிட்ட மாவட்டங்களில் நிகழ்ந்தனவற்றைக் கொண்டு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, மட்டக்களப்பில் ஊளுழுக்களின் ஈடுபாடு 1960 களில் நிறுவப்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டத்திலிருந்தே காணப்பட்டுள்ளது. உள்நாட்டுப் போர் மற்றும் 2004 சுனாமி ஆழிப்பேரலை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊளுழுக்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதில் முக்கிய பங்கைக் வகித்துள்ளன.
இவை ஊளுழுக்கள் இந்த பிராந்தியத்தில் நுழைவதற்குக் காரணமான பிரதான நிகழ்வுகளாக இருந்தாலும், லுஆஊயு போன்ற சமயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் சூரியமல் போன்ற அரசியல் சார்ந்த அமைப்புகள் காலனித்துவ காலத்தில் நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இலங்கையில் ஊளுழுக்களுக்கு நீண்ட வரலாறு உண்டு.

இந்த காரணத்தினாலேயே சில பிரதேசங்களில் ஊளுழு ஈடுபாடு மிகவும் குறைவான இருப்பது சுவாரசியமாக உள்ளது. பண்புசார் ஆய்வில், நேர்காணலில் கலந்துகொண்ட சில ஊளுழுக்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நிதி வெளிநாட்டிலிருந்து வருவதால் கடந்த காலத்தில் சமூகங்கள் தமக்கு எதிராக இருந்தன எனக் குறிப்பிட்டன. (னுநளழவவய, 2005). இந்த உணர்வு மட்டக்களப்பில் மாறியிருந்தாலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இது பரவலாக உள்ளது. இதுவும் பல்வேறு பிரதேசங்களில் ஊளுழு செயற்பாடு எவ்வாறு அமைகிறது என்பதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். இதை கருத்தில் கொண்டு அவதானிக்கும்போது இந்த ஆய்வானது மேலதிக ஆய்வுகளுக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாக அமையும்.

# Bibliography


- ADB, 2013. Civil Society Briefs: Sri Lanka, Manila: Asian Development Bank.
- ADB, 2022. Working Together for Development Results: Lessons from ADB and Civil Society Organization Engagement in South Asia. Philippines: Asian Development Bank.
- Al-Dawoody, A. & Finegan, O., 2020. COVID-19 and Islamic burial laws: safeguarding dignity of the dead. [Online]
- Available at: https://blogs.icrc.org/law-and-policy/2020/04/30/covid-19-islamic-burial-laws/
- [Accessed 23 05 2023].
- Alexander, D., 2015. Disaster and emergency planning for preparedness, response and recovery, Oxford: Oxford research encyclopedia of natural hazard science.
- Carmen, A.-C. & Tegal, M., 2021. The Case of Forced Cremations in Sri Lanka. [Online]
- Available at: https://www.fairobserver.com/region/central_south_asia/carmen-aguilera-carnerero-megara-tegal-sri-lanka-cremation-sri-lankan-muslims-islamophobia-world-news-74230/
- [Accessed 23 05 2023].
- Daily Mirror, 2018. No infertility tablets in western medicine: Health DG. Colombo: The Daily Mirror.
- Department of Census and Statistics, 2033. Department of Census and Statistics. [Online]
- Available at: http://www.statistics.gov.lk/
- Devotta, N., 2005. Civil Society and Non-Governmental Organisations in Sri Lanka: Peacemakers or Parasites?. Civil Wars, 7(2), pp. 171-182.
- Fernando, R., 2021. Violence against women: COVID-19 breakout sees surge in domestic violence both here and globally, Sri Lanka: The Sunday Times.
- Fernando, U., 2003. NGOs in Sri Lanka: Past and Present Trends. Sri Lanka: Wasala Publications.
- Goonatilake, S., 2006. Recolonisation: Foreign Funded NGOs in Sri Lanka. New Delhi: Sage Publications.
- Gunatilleke, G., 2021. Reframing the Debate: The State & Disinformation in Sri Lanka. [Online]
- Available at: https://blogs.lse.ac.uk/southasia/2021/12/06/reframing-the-debate-the-state-disinformation-in-sri-lanka/
- [Accessed 23 05 2023].
- Gupta, K., 2022. Sri Lanka aims for food security after ill-fated fertilizer ban. [Online]
- Available at: https://asia.nikkei.com/Spotlight/Sri-Lanka-crisis/Sri-Lanka-aims-for-food-security-after-ill-fated-fertilizer-ban
- [Accessed 22 March 2023].
- Jayasinghe, R., 2007. Civil society organisations in Sri Lanka: Their strengths and weaknesses. Modern Sri Lanka Studies, II(2).

- Jayasinghe, U. & Ghoshal, D., 2022. Fertiliser ban decimates Sri Lankan crops as government popularity ebbs. [Online]
- Available at: https://www.reuters.com/markets/commodities/fertiliser-ban-decimates-sri-lankan-crops-government-popularity-ebbs-2022-03-03/
- [Accessed 22 March 2023].
- Jayawardana, S., 2018. Manhunt intensifies for Ampara suspects after pill turns to flour. Colombo: The Sunday Times.
- MENAFN, 2018. Infertility pills don't exist, says World Health Organization. MENA: MENAFN.
- Mendis, B. D., 2021. Prof .Vandana Shiva hails Lanka's decision to ban chemical fertilizer. [Online]
- Available at: https://dailynews.lk/2021/06/09/local/251203/prof-vandana-shiva-hails-lanka%E2%80%99s-decision-ban-chemical-fertilizer
- [Accessed 22 March 2023].
- OECD, 2009. Findings, Recommendations and Good Practice. Ukraine: OCED Publishing.
- Orjuela, C., 2005. Dilemmas of Civil Society Aid: Donors, NGOs and the Quest for Peace in Sri Lanka. Peace and Democracy in South Asia , 1(1), pp. 1-12.
- Orjuela, C., 2008. The Identity Politics of Peacebuilding: Civil Society in War-torn Sri Lanka. 1 ed. India: Sage Publications India.
- Parkin, B. & Ratnaweera, M., 2022. Sri Lanka farmers count the cost of government fertiliser ban. [Online]
- Available at: https://www.ft.com/content/27a4fa03-74d7-409a-89e6-0f0391786c3e
- [Accessed 22 March 2013].
- Rasheed, Z. & Kuruwita, R., 2022. Sri Lanka faces 'man-made' food crisis as farmers stop planting. [Online]
- Available at: https://www.aljazeera.com/news/2022/5/18/a-food-crisis-looms-in-sri-lanka-as-farmers-give-up-on-planting
- [Accessed 22 March 2023].
- Sunday Observer, 2018. Tension in Ampara after fake 'sterilization pills' controversy. [Online]
- Available at: https://www.sundayobserver.lk/2018/03/04/news/tension-ampara-after-fake-%E2%80%98sterilization-pills%E2%80%99-controversy
- [Accessed 23 05 2023].
- The Sunday Times, 2018. More than 200 Lankan doctors say there's no 'wanda pethi'. [Online]
- Available at: https://www.sundaytimes.lk/180311/news/more-than-200-lankan-doctors-say-theres-no-wanda-pethi-285547.html
- [Accessed 23 05 2023].
- Tyubee, B., 2020. Disaster Preparedness: Approaches and Frameworks. Nigeria, Benue State University Makurdi.
- UN/IDSR & UN/OCHA, 2008. Disaster preparedness for effective response guidance and indicators package for implementing priority five of the Hyogo framework, Geneva, Switzerland: United Nations secretariat of the International Strategy for Disaster Reduction (UNISDR) and the United Nations Office for Coordination of Humanitarian Affairs (UNIOCHA).

- UNFPA, 2018. UNFPA & WHO: Joint Media Statement. [Online]
- Available at: https://srilanka.unfpa.org/en/news/unfpa-who-joint-media-statement
- [Accessed 23 05 2023].
- UNFPA, 2020. Bringing the shadow pandemic to light. [Online]
- Available at: https://srilanka.unfpa.org/en/news/bringing-shadow-pandemic-light
- [Accessed 10 05 2023].
- UN, n.d. United Nations. [Online]
- Available at: https://www.un.org/en/civil-society/page/about-us#:~:text=A%20civil%20society%20organization%20(CSO,local%2C%20national%20or%20international%20level.
- [Accessed 16 March 2023].
- USAID, 2021. Sri Lanka Civil Society: Sector Formative Evaluation, s.l.: USAID.
- Verite, 2022. 2021 Civil Society Organization Sustainability Index, Colombo: Verite.
- Wickramasinghe, N., 2001. Civil Society in Sri Lanka: New Circles of Power. 1 ed. New Delhi: Sage Publications.
- Wijedasa, N., 2022. 'God and prayers of predominantly Sinhalese patients protected me'. [Online]
- Available at: https://www.sundaytimes.lk/220123/news/god-and-prayers-of-predominantly-sinhalese-patients-protected-me-469799.html
- [Accessed 23 05 2023].
- Young, N., 2022. Sri Lanka's fertiliser ban and why New Zealand can phase out synthetic nitrogen fertiliser. [Online]
- Available at: https://www.greenpeace.org/aotearoa/story/on-sri-lankas-fertiliser-ban/#:~:text=The%20botched%20Sri%20Lankan%20fertiliser,all%20synthetic%20fertilisers%20and%20pesticides.
- [Accessed 22 March 2023].

# இணைப்பு I: கணக்கெடுப்பு வினாக்கொத்து

## எதிர்பாராத அல்லது திடீர் வன்முறைகளுக்கு எதிர்வினையாற்றும்போது சிவில் சமூக அமைப்புகள் எதிர்கொள்ளும் சவால்கள்

I. உங்களது அமைப்பு எப்போது நிறுவப்பட்டது?
*அவசியம்

II. உங்கள் தலைமை அலுவலகம் அல்லது ஏதேனும் ஓர் அலுவலகம் இருப்பின், அது எந்த மாவட்டத்தில் உள்ளது?
(உங்களிடம் பௌதிக அலுவலகம் இல்லையெனில் நீங்கள் ே∴யு என பதிலளிக்கலாம்)

### கணக்கெடுப்பு வினாக்கள்

பதில்கள் அநாமதேயமாக மட்டுமே பகிரப்படும் என்பதை கருத்திற் கொள்ளவும். நீங்கள் பகிரும் எந்தவொரு தகவலும் உங்கள் நிறுவனத்துக்கு சாட்டப்படவோ, உங்கள் நிறுவனத்தை எளிதில் அடையாளம் காணக்கூடிய வேறு எந்த வகையிலும் குறிப்பிடப்படவோ மாட்டாது.

*அவசியம்

1. நீங்கள் முன்பு மற்றும் தற்போது வேலைத்திட்டம்∴நிகழ்ச்சித்திட்டம்∴களப்பணிகளை மேற்கொண்டு வரும் மாவட்டத்தை∴மாவட்டங்களையும் (அடிப்படை அமைவிடம் நீங்கலாக) தெரிவு செய்க.
பொருந்தக்கூடிய அனைத்தையும் குறியிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை |
| நுவரெலியா | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் |
| கிளிநொச்சி | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | மட்டக்களப்பு |
| அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அனுராதபுரம் |
| பொலன்னறுவை | பதுளை | மொனராகலை | இரத்தினபுரி | கேகாலை |
| மேற்கூறிய யாவும் | | | | |

2. உங்கள் பணியின் முக்கிய பரப்புகள் யாவை?
பொருந்தக்கூடிய அனைத்தையும் குறியிடுக.

பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள்
வறுமை
பொருளாதார அபிவிருத்தி
சூழல் (இயற்கையான மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்கள்)
LGBTQ
உடல் ஊனங்கள்
சாதி
மத∴இன சிறுபான்மை பிரச்சினைகள்
சிறுவர்கள்∴இளைஞர்கள்

3. உங்களது அமைப்பு எவ் வகையான பணியைச் செய்கிறது?
பொருந்தக்கூடிய அனைத்தையும் குறியிடுக.

நிவாரணம் (உ-ம்: நிதி, உணவு, உடை, இன்னபிற)
ஆய்வு.்.அறிக்கைகள்
சனசமூக கட்டட வேலைத்திட்டங்கள்
நிலைபேறான வேலைத்திட்டங்கள்
விவசாய வேலைத்திட்டங்கள்
கல்வி
விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள்
ஏனையவை

4. இந்த வேலைத்திட்டங்களுக்கு நீங்கள் நிதியைப் பெற்றுள்ளீர்களா அல்லது அவை நிதியற்ற.்.தன்னார்வப் பணியா?
பொருந்தக்கூடிய அனைத்தையும் குறியிடுக.

அனைத்து வேலைதிட்டங்களும் 100மூ நிதியளிக்கப்பட்டவை
அனைத்து வேலைத்திட்டங்களும் தன்னார்வ அடிப்படையிலானவை
சில வேலைத்திட்டங்கள் தன்னார்வ அடிப்படையிலானவை, ஏனையவை நிதியளிக்கப்பட்டவை
ஏனையவை

5. கடந்த 2 ஆண்டுகளில் உங்களது அமைப்பு எத்தனை வேலைத்திட்டங்களை நிறைவு செய்துள்ளது அல்லது ஈடுபட்டுள்ளது?

ஒன்றை மட்டும் குறியிடுக.
1 - 5 வேலைத்திட்டங்கள்
6 - 10 வேலைத்திட்டங்கள்
11-15 வேலைத்திட்டங்கள்
16 - 20 வேலைத்திட்டங்கள்
21 அல்லது அதற்கு மேற்பட்ட வேலைத்திட்டங்கள்
ஏனையவை:

6. இந்தத் வேலைத்திட்டங்களில் ஒரு மாதத்திற்கும் குறைவான வரையான கால வரம்புக்கு உட்பட்டவை எத்தனை சதவீதமானவை?
ஒன்றை மட்டும் குறியிடுக.

25மூ அல்லது குறைவாக
26மூ இற்கும் 50மூ இற்கும் இடையே
51மூ இற்கும் 75மூ இற்கும் இடையே
76மூ அல்லது அதற்கு மேல்

7. இந்தத் வேலைத்திட்டங்களில் ஒரு மாதம் முதல் ஆறு மாதங்கள் வரையான கால வரம்புக்கு உட்பட்டவை எத்தனை சதவீதமானவை?
ஒன்றை மட்டும் குறியிடுக.

25% அல்லது குறைவாக
26% இற்கும் 50மூ இற்கும் இடையே
51% இற்கும் 75மூ இற்கும் இடையே
76% அல்லது அதற்கு மேல்

8. இந்தத் வேலைத்திட்டங்களில் ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரையான கால வரம்புக்கு உட்பட்டவை எத்தனை சதவீதமானவை?
ஒன்றை மட்டும் குறியிடுக.

25 மூ அல்லது குறைவாக
26மூ இற்கும் 50மூ இற்கும் இடையே
51மூ இற்கும் 75மூ இற்கும் இடையே
76மூ அல்லது அதற்கு மேல்

9. இந்தத் வேலைத்திட்டங்களில் ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்துக்குரியவை எத்தனை சதவீதமானவை?
ஒன்றை மட்டும் குறியிடுக.

25மூ அல்லது குறைவாக
26மூ இற்கும் 50மூ இற்கும் இடையே
51மூ இற்கும் 75மூ இற்கும் இடையே
76மூ அல்லது அதற்கு மேல்

10. இந்தத் வேலைத்திட்டங்கள்.்.நிகச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும்போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?
பொருத்தமான அனைத்தையும் குறியிடுக

சமூகம்.்.மக்களது எதிர்ப்பு
சமூகம்.்.மக்களது அக்கறையின்மை
அரசு ஒத்துழைக்கவில்லை
அரசின் அதிகாரவாதம்
பாதகமான அரசு தலையீடு
பொருத்தமற்ற சூழல் நிலைமைகள்
குறைவான ஊழியர்கள்
வளங்களின் பற்றாக்குறை
வரையறுக்கப்பட்ட இயலுமை.்.திறன்.்.அறிவு
அரசாங்க வளங்கள் இல்லாமை மற்றும்.்.அல்லது ஆதரவான பொறிமுறைகள் இல்லாமை
ஏனையவை

11. நீங்கள் அணுகும்போது அரசு (அமைச்சு மட்டம்) பொதுவாக உங்களுக்கு உதவிகரமானதாக உள்ளதா?
ஒன்றை மட்டும் குறியிடுக.

ஒருபோதும் இல்லை
எப்போதும்

12. நீங்கள் அணுகும்போது அரசு (உள்ளூராட்சி மன்றம்) பொதுவாக உங்களுக்கு உதவிகரமானதாக உள்ளதா?
ஒன்றை மட்டும் குறியிடுக.

ஒருபோதும் இல்லை
எப்போதும்

13. நீங்கள் இணைந்து பணிபுரியும் பொதுமக்கள் அல்லது சமூகங்களை நீங்கள் தொடர்பு கொள்ளும்போது அவர்கள் பொதுவாக பதிலளிப்பவர்கள் என உங்களால் கூற முடியுமா?
ஒன்றை மட்டும் குறியிடுக.

ஒருபோதும் இல்லை
எப்போதும்

14. நீங்கள் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பான பிரச்சனைகளில் பணிபுரிந்தால், அவர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்.ஃ.நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும்போது ஏற்படக்கூடிய சவால்கள் என்ன?
ஒன்றை மட்டும் குறியிடுக.

இலக்குக்குழுவின் எதிர்ப்பு
சமூகத்தின் எதிர்ப்பு
ஆண்களின் எதிர்ப்பு
அரசின் எதிர்ப்புகள்
பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகளில் பணி புரியாதீர்கள்
ஏனையவை

15. உங்களது அமைப்பு என்றேனும்:
பொருந்தக்கூடிய அனைத்தையும் குறியிடுக.

முகங்கொடுத்த சவால்கள் காரணமாக ஒரு வேலைத்திட்டம் கைவிடப்பட்டது (கடந்து வர இயலாது)
ஒரு வேலைத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது
சவால்களுக்கு ஏற்ப ஒரு திட்டம் (தொடங்கியவுடன் அல்லது நடுவழியில்) மாற்றியமைக்கப்பட்டது
சவால்களுக்கு மத்தியிலும் ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்ட ஒவ்வொரு திட்டம் முடிக்கப்பட்டது
ஏனையவை

16. நீங்கள் எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை தொடர்பான பிரச்சினைகளில் பணியாற்றுகிறீர்களா? ஜஉ-ம்: உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு, இயற்கை அனர்த்தங்கள், கலவரங்கள், பாலியல் வல்லுறவு, கொலை, முதலியனஸ
*ஒன்றை மட்டும் குறியிடுக.

ஆம்
இல்லை

17. மேலே உள்ள வினாவுக்கு நீங்கள் "ஆம்" என்று பதிலளித்திருந்தால், கடந்த 5 ஆண்டுகளில் இருந்து சில உதாரணங்களை பட்டியலிட முடியுமா?

புள்ளிப் படிவத்தில்
1, 2, 3 எனக் குறிப்பிடவும்

18. வேலைத்திட்டம்.ஃ.நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைக்கும்போது பெண்கள் அல்லது பெண்பிள்ளைகள் அதன் முக்கிய இலக்காக இராதபோதும், எதிர்பாராத அல்லது திடீர் வன்முறை தொடர்பான வேலைத்திட்டம்.ஃ.நிகழ்ச்சித்திட்டத்தில் அவர்களுக்கு உதவுவது.ஃ.உதவி செய்வதில் ஈடுபகின்றனவா?
ஒன்றை மட்டும் குறியிடுக

எப்போதும்
சில நேரங்களில்
ஒருபோதும் இல்லை

19. வேலைத்திட்டங்கள்.∴.நிகழ்ழ்சிநிரல்களை வடிவமைக்கும்போது பின்வருவனவற்றில் எப்போதும் கருத்திற் கொள்ளப்படுவன அல்லது முன்னுரிமை வழங்கப்படுவன யாவை?
பொருந்தக்கூடிய அனைத்தையும் குறியிடுக.

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் தேவைகள்
LGBTQ சமூகத்தின் தேவைகள்
முதியவர்களின் தேவைகள்
உடல் குறைபாடுகள் உடையோரின் தேவைகள்
தாழ்த்தப்பட்ட சமூகங்களின் தேவைகள்
மத மற்றும்.∴.அல்லது இன சிறுபான்மையினரின் தேவை
ஏனையவை

19.1 இந்த ஆய்வின் நீட்சியாக இன்னும் ஆழமான நேர்காணலுக்கு உங்களைத் தொடர்பு கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா? ஆர்வமுள்ளவர்கள் உங்களது பெயரைக் குறிப்பிடவும் (இது யாருடனும் பகிரப்படாது மற்றும் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலும் அநாமதேயமாகவே இருக்கும்)

19.2 தயவுசெய்து உங்கள் அமைப்பின் பெயரை வழங்கவும் (இறுதி அறிக்கையில் பெயர்கள் வெளியிடப்படாது)

19.3 ஒரு நேர்காணலுக்கு உங்களை தொடர்பு கொள்வதை நீங்கள் விரும்பினால், தயவுசெய்து தொலைபேசி இலக்கத்தை வழங்கவும்

19.4 தயவுசெய்து உங்களது மின்னஞ்சல் முகவரியை வழங்கவும்




சட்ட மற்றும் சமூக நம்பிக்கை.
03 கின்ஸ்லி டெரன்ஸ், கொழும்பு 08.
தொலைபேசி இல : 94 11 2684845 | 94 11 2691228 | 94 11 2684853
தொலைநகல் : 94 11 2686843
ஈ-மெயில் : info@lstlanka.org
இனையத்தளம் : https://www.lstlanka.org

ISBN 978-624-5545-21-6
9 786245 545216